விலை ரூபா: 6.00

பக்கங்கள்:-பன்னிரெண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 18 வியாழக்கிழமை (02.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 14

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

### உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள
# அரியாலை - கீரிமலையில் குடியிருக்க அனுமதி!

## அரசு புலிகளுக்கு அறிவிப்பு

(நமது நிருபர்)

**யாழ்.குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள அரியாலை மற்றும் கீரிமலை ஆகிய இரண்டு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படுவார்கள் என்று அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

யாழ்.குடாநாட்டின் அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு இராணுவம் விதித்திருந்த நிபந்தனைகளை அடுத்து தமிழீழ விடுத்லைப் புலிகளுக்கும் இராணுவத்தரப்பினருக்குமிடையே எழுந்த முரண்பாடுகளைக் களைவதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த உயர் மட்டக் குழுவினர் உயர் பாதுகாப்பு வலயங்களிற்கு நேரில் சென்று பார்வையிட்டதையடுத்தே மேற்படி இரு பகுதிகளிலும் மக்கள் மீளக் குடியமரலாம் என இனங்காணப்பட்டுளளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அரியாலையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள கோயில் சந்தைப் பகுதியிலும், வலிகாமம் வடக்கு கீரிமலைப் பிரதேசத்திலும் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கலாம்என்று யாழ்குடாநாட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா பரிந்துரை செய்திருந்தமையை அடுத்தே மக்கள மீளக

(12ம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி நிதியத்திலிருந்து
## யாழ். பொது நூலகத்திற்கு ரூ. ஆயிரமே வழங்கப்பட்டது

(கொழும்பு)

யாழ்ப்பாணம் பொது நூலகப் புனர்நிர்மாணப் பணிகளுக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டிருந்ததாக கணக்காய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

1998-99ஆம் ஆண்டின் ஜனாதிபதி நிதியத்தின் கணக்குகளின் படி யாழ்.பொது நூலகத்திற்கு ஆயிரம் ரூபாவும், வெள்ளப் பெருக்கு உதவி நிதிக்கு ஐயாயிரம் ரூபாவும், தேசிய தினக் கொண்டாட்டத்திற்கு ஐந்து இலட்சத்து இருபத்தோராயிரத்து 332 ரூபாவும்,அகதிகளுக்கான உதவி நிதியாக ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.அத்துடன் அபிவிருத்தி லொத்தர் நிதியத்தில் இருந்து ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைக்கப் பெற்ற இருபத்தி நாலுகோடியே ஏழுலட்சத்து பதின் மூவாயிரத்து 334 ரூபாவை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணச் சான்றுகள் 1999 ஏப்ரல் 31க்குப் பிந்தாமல் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அது 2001 மார்ச் 8ஆம்திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### உயர் பாதுகாப்பு வலய விவகாரம்
## இராணுவ-புலித்தளபதிகள் முகமாலையில் கூடுவர்

(கொழும்பு)

அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்ளை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எதிர்வரும் 14ம் திகதி செவ்வாய்க் கிழமை விஷேட கலந்துரையாடல் ஒன்று முகமாலையில் நடை பெறவுள்ளதாகப் பாதுகர்ப்பு செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ அறிவித்ததுள்ளார்.

இவ் விஷேட கலந்துரையாடலில் இராணுவத் தரப்பில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் ஏனைய உயர் மட்ட அதிகாரிகளும்,விடுதலைப் புலிகள் சார்பில் வடமுனைக் கட்டளைத்

(12ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் குரல்
## 16ந் திகதி விஸ்தரிப்பு

(கிளிநொச்சி)

மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 10ம ஆண்டு நினைவு நாளான எதிர்வரும் 16ந் திகதி புலிகளின் குரல் வானொலியின் ஒலிபரப்பு நேர அதிகரிப்பும்,வீச்சுத் தூரவிரிவாக்கமும் ஆரம்பிக்கப்படும்.

புலிகளின் குரல் வானொலி தனது சேவையை பண்பலை 98 அதிர்வெண்ணில் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

## புலிகளின் வானொலிக்கான அனுமதியை ரத்துச் செய்க
### மேல்நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலி ஒலிபரப்பிற்கு வழங்கப்பட்ட அனுமதியைத் தடை செய்யுமாறு கோரி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்ப்பட்டுள்ளன.

இந்த மனுக்களை சிங்கள தேசிய சங்கத்தின் செயலாளர் கலாநிதி பியசேன திஸநாயக்கா, ஜயத்திலகா ஆகியோர் செய்துள்ளனர்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க், ஊடகத் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்,அமைச்சின் செயலாளர் குமார அபயசிங்கா,தொலைத் தொடர்பு

(12ம் பக்கம் பார்க்க)

துரையாடல் ஒன்று முகமாலையில் நடை பெறவுள்ளதாகப் பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ

மட்ட அதிகாரிகளும்,விடுதலைப் புலிகள் சார்பில் வடமுனைக் கட்டளைத்

(12ம் பக்கம் பார்க்க)

பிடத்தக்கது. (வ)

சங்கத்தின் செயலாளர் கலாநிதி பிய (12ம் பக்கம் பார்க்க)

# கப்பலில் இருந்து பொருள் எதுவும் தரை இறக்கப்படவில்லை!

## கடற்படைத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணக் கடற்பரப்பில் அண்மையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய கப்பலில் இருந்து எந்தவொரு பொருளும் தரையிறக்கப்படவில்லையென கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கப்பலில்விடுதலைப் புலிகளிற்கு ஆயுதம் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து வடக்குக் கிழக்குப் பிரதேசகடற்புரப்பில் பாதுகாப்பை பலப்படுத்தி யுள்ளதாகவும் சந்தேகத்திற்கு இடமான

(12ம் பக்கம் பார்க்க)

# தொண்டமனாறு கடற்பரப்பில் மீன்பிடிபடகுடன் டோறா மோதியது!

## ஒருவரைக் காணவில்லை; இருவர் படுகாயம்.

(பருத்தித்துறை)

தொண்டமனாறு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வள்ளம் மீது கடற் படையினரின் டோறாப் படகு மோதியதில் ஒருவர் காணாமல் போயுள்ளதுடன் இருவர் காயமடைந்த நிலையில் பலாலி படைத் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது நேற்று முன் தினமிரவு 7மணியளவில் தொண்டமனாறு கடலில் மீன் பிடிக்கச் சென்ற தொண்டமனாறைச் சேர்ந்த பொன்னன் ஞானேஸ்வரன்(வயது32) கெருடாவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி சோதிலிங்கம்(வயது50) அவரது மகன் சோதிலிங்கம் காண்டீபன்(வயது24) ஆகிய மூவரும் நேற்றுக் காலை வரை

(12ம் பக்கம் பார்க்க)

## சரத்பொன்சேகாவுக்கு இடமாற்றமில்லை

(கொழும்பு)


வடபகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன் சேகாவை இடமாற்றுவது என்ற தீர்மானம் எதனையும் அரசாங்கம் எடுக்கவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்குப் பொறுப்பான கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் சரத் வீரசேகரா இடமாற்றப்பட்டுள்ள போதிலும் சரத் பொன்சேகாவை மாற்றுமாறு எவரும் எழுத்து மூலம் கேட்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை கடற் படைத் தளபதியின் இடமாற்றம் கடற்படையின் கொள்கைகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ந-5)

# சமாதான முயற்சியைக் குழப்ப இனவாத சக்திகள் சதித் திட்டம்.

## -சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு-



(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின், புலிகளின் குரல் வானொலிக்கு நவீன உபகரணங்கள் வந்துள்ளமையை தென்னிலங்கை இனவாத சக்திகள் பெரிதுபடுத்தி பிரசாரம் செய்து வருவது தற்போதைய சமாதான அமைதிச் சூழலை திட்டமிட்டு குழப்பும் ஒரு சதி முயற்சியென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் குரல் வானொலி தலைமையகத்தில் நடை பெற்ற நிகழ்விலும்,புதிய அலுவலகக் கட்டடத் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டு பேசிய போதே சு.ப.தமிழ்ச்செல்வன் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

கடந்த பல ஆண்டுகளாக புலிகளின் குரல் வானொலிக்கு நவீன சாதனங்களைப் பெறும் முயற்சிகளில் ஈடுபட்ட போதும் தற்போதே அவை எம்மால் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது சர்ச்சைக்குரிய ஒருபெரிய விடயமல்ல. ஆனால்தென்னிலங்கை இனவாதிகள் இந்த விடயத்தைப்

(12ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சமாதானம் தடைப்படுமாயின் பொருளாதாரம் படுமோசமடையும்

## மத்தியவங்கி பிரதிஆளுநர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களில் ஏதாவது தடை ஏற்படுமானால் நாட்டின் பொருளாதாரத்திற்கும், நிதித்துறைக்கும் ஏற்படும் பாதிப்பு ஈடுசெய்ய முடியாதவாறு இருக்கும் என மத்திய வங்கியின்பிரதி ஆளுநர் டபிள்யு ஏ. விஜேவர்த்தனா நேற்றுமுன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், கடந்த 20ஆண்டுகளில் நாட்டின் நிதித்துறைக்கும் பொருளாதாரத்துறைக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு பெரியதாகும்.

கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இச்சமாதான முன்னெடுப்புகளால் அவ்வருடம் முழுவதும் நாட்டின் பொருளாதாரத்திற்கு திருப்திகரமான நிலைமை காணப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பொருளாதார மற்றும் நிதித்துறைகளின் நம்பிக்கைகள் வலுவடைந்துள்ளன.

இதனால் நாட்டின் பொருளாதாரம் எதிர்பார்க்கப்பட்ட 3சதவீத வளர்ச்சியை விட உயர்வைக் காட்டுகிறது.

இச்சமாதான முயற்சி இவ்வாண்டின் இறுதி இலக்கை அடையாவிட்டாலும் எதுவித இடையூறுகளும் இன்றி தொடருமாயின் இவ்வாண்டிற்குரிய பொருளாதார வளர்ச்சி 4.5 தொடக்கம் 5.0சதவீதம் வரை வளர்ச்சியடையக் கூடும்.

தொடரும் போர்நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆகிய காரணிகளே இம் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணிகளாகும்.

தற்போது தொடரும் சமாதான முயற்சிகள் இவ்வாண்டில் முடிவடைந்து அதன் இறுதிக் கட்டம் எட்டப்படும் என்ற நம்பிக்கை பொருளாதாரத்துறையில் வலுவடைந்திருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். (உ-3)

## மீளக்குடி

படி ராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மீளக் குடியமர்வு தொடர்பாக மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகா அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுப்பாரானால் இந்த அதிகாரியை இடமாற்றம் செய்து அவ் இடத்தில்,

அரச கொள்கையைப் பின்பற்றக் கூடியவேறொருவரை நியமிப்பது தான் சிறப்பாய் இருக்கும் என்று நான் கருதுகின்றேன் என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விநாயகமூர்த்தி இந்தப் பிரச்சினை திருப்திகரமாகத் தீர்க்கப்படாவிட்டால் அமைதி முயற்சியானது ஒருபோதும் முன்னேற மாட்டாது என்றும் வலியுறுத்தியுள்ளார் (பி)

# கொட்டடி மீன் சந்தை வைபவரீதியாக திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மீன் சந்தை நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம் நாடா வெட்டி சந்தைக்கட்டடத்தை திறந்து வைக்க, யாழ் மாநகரசபை முதல்வர் எஸ்.கந்தையன் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்தார்.

யாழ் மாநகர சபையினால் 15இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்திலேயே கொட்டடி மீன் சந்தை இயங்குவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# அத்துமீறி மீன்பிடித்த 36 தமிழக மீனவர்களை பூநகரி மீனவர் பிடித்தனர்

(கிளிநொச்சி)

பூநகரிக் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 36தமிழக மீனவர்களையும் ஒன்பது இழுவைப் படகுகளையும் பூநகரி மீனவர்கள் பிடித்து அரச அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

பூநகரிக் கடற்பரப்பினுள் பிரவேசித்த இந்திய மீனவர்கள் அப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்கு சேதம் விளைவித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு பூநகரி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் தமது கடற்பரப்பிற்குள் வரமாட்டார்களென இந்திய அரசு உத்தரவாதமளிக்க வேண்டும் என்றும், அவ்வாறு உத்தரவாதமளித்த பின்பே தாங்கள் கைப்பற்றியுள்ள 9இழுவைப் படகுகளையும் ஒப்படைக்க முடியும் எனவும் பூநகரி மீனவர்கள் அறிவித்துள்ளார்கள். (ந-5)

# சேமலாபநிதி திருத்தமசோதா உச்ச நீதிமன்றத்தில் எதிர்த்து மனுத் தாக்கல்

(மருதானை)

ஊழியர் சேமலாபநிதி திருத்தமசோதாவானது அரசாங்க ஊழியர்களைஇரண்டு வகையாகப் பிரிக்கப்பார்க்கின்றது என உச்ச நிதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஒரு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சேவைகள் ஐக்கியதொழிலாளர் சங்கத்தின் தலைவர் சார்பில் இந்த மனு உச்சநீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இச்சங்கத்தின் தலைவரான ஜெயப்பிரிய நாணயக்கார தனது மனுவில் இந்ததிருத்தச்சட்ட மசோதா நிறைவேறுவதற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை ஆதரவு இருக்கவேண்டுமென உத்தரவிடுமாறு நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

இந்த திருத்தசட்ட மசோதாவில் அரசஊழியர்களில் ஒரு பிரிவினர் ஓய்வூதியநிதிக்கு பங்களிப்பு செய்யவேண்டும் இன்னொருபகுதியினர் பங்களிப்பு வழங்க வேண்டியதே இல்லை

இந்த மசோதா பாரபட்சமானது, இலங்கை அரசமைப்புக்குப் பொருந்தாதது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மசோதாவின்படி 2003ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் அரசாங்க சேவையில் சேர்பவர்கள் தங்கள் சம்பளத்தில்எட்டு வீதத்தை ஓய்வூதிய நிதிக்கு வழங்க வேண்டும். இதனால் இப்பிரிவின் பாரபட்சத்துக்கும், முன்னேற்றப் பாதிப்புக்கும் உள்ளாவரர்கள்,

2003 ஜனவரி 1க்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள் ஓய்வுகால நிதிக்கு எந்தவித பங்களிப்பும்செய்யத் தேவையில்லை. அவர்கள் தமதுசம்பளத்தில் 90வீதத்தை ஓய்வூதியமாகப் பெறுவார்கள். இது அரசமைப்பின் 26ஏ பிரிவுக்கு முரணாகும். இவ்வாறு அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பி)

## பொன்னாலை மீள்குடியேற்றம் குறித்து செயலகத்தில் இன்று கலந்துரையாடல்

(மானிப்பாய்)

பொன்னாலை மற்றும் அதனைஅண்டிய பகுதிகளில் பொதுமக்களை மீளக்குடியமர்த்துவதுகுறித்த விசேட கலந்துரையாடல்ஒன்றுஇன்று மு.ப. 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் செ. பத்மநாதன், பொன்னாலை பொதுமக்கள்ஒன்றியப் பிரதிநிதிகள், மற்றும் கடற்படை தளபதிகள் இராணுவ உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, தம்மைமீளக் குடியமர்த்துமாறு கோரி சங்கானை பிரதேசசெயலகம் முன்பாக பொன்னாலை மற்றும் அதனை அண்டியபகுதி மக்களால் நடத்தப்படும் மறியல்போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது. (உ-232)

# வளவில் குப்பை குவித்து வைத்தவர் நீதிமன்றில் ஆஜர்

(மருதானை)

குப்பைகளை வளவுக்குள் கொட்டி நிரப்பி வைத்திருந்ததாகவும் வளவுத் தோட்டத்தை நுளம்பு உற்பத்தியாகும்வகையில் வைத்திருந்ததாகவும்கூறி பொரலஸ்கமுவ பிரகத்தி மாவத்தையைச் சேர்ந்த சமந்தி லக்மினி திலகரத்ன என்ற பெண் நீதிமன்றில் நிறுத்தப்பட்டார்.

தன்தோட்ட இருந்தநிலைமைக்கு தான் மட்டும்பொறுப்பில்லையென்றும் அயலவர்களும் குப்பை கூழங்களை கொட்டுகிறார்கள் என்றும் அவர் நீதிமன்றில் கூறினார்.

இதைச் செவிமடுத்த கஸ்கொடவில மேலதிக நீதிவான் அயலவர்களையும் நீதிமன்றுக்குவரவழைத்து எச்சரிக்கை செய்தார்.

இனியும் குப்பைகளைக் கொட்டிநிரப்பக்கூடாதென்று கூறியதுடன் நிலைமையை அவதானித்து பெப்ரவரி 26 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்கும் படி பொது சுகாதார அதிகாரிக்கு உத்தரவிட்டார். (பி)

# இராசி பலன்

(2-01-2003)

(மார்கழி 18, வியழான்)

அமாவாசை பி. இ. 2. 24 வரை

மூலம் பி. ப. 6. 06வரை

அமாவாசை விரதம்

**மேடம்**
புதிய திட்டமிடல், நிலை மாற்றம், முயற்சி தாமதம், மனச்சஞ்சலம்

**இடபம்**
வாகன பயம், வீண் தொல்லை, எதிர்பாராத நன்மை, முயற்சி தாமதம்

**மிதுனம்**
திடீர் பயணம், கௌரவம், குடும்பசுகம், தனவரவு

**கடகம்**
காரியஅனுகூலம், தொழில் நன்மை, உடல்நலம், மனமகிழ்ச்சி

**சிங்கம்**
சகோதரர் உதவி, கௌரவக் குறைவு, வியாபார நன்மை, குடும்பக் கவலை

**கன்னி**
ரோகபயம், கல்வியில் ஆர்வம், பகைவர் நேசம், முயற்சி தாமதம்

**துலாம்**
கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், அந்நியர் சந்திப்பு, புதிய பொருள் சேர்க்கை

**விருச்சிகம்**
வாக்கு கலகம், தனவிரயம், மாதர் நட்பு, முயற்சிதாமதம்

**தனுசு**
பெரியோர் ஆசி, நல்ல முயற்சி, கற்பனை மிகுதி, போசனசுகம்

**மகரம்**
உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், தனவிரயம், பிதா சிந்தை

**கும்பம்**
எதிர்பாராத நன்மை, தனலாபம், தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும்.

**மீனம்**
செய்தொழில் விருத்தி, முயற்சிகைகூடும், சுபநிகழ்ச்சி உற்சாகம்

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்

# அதிகாரப்பரவலாக்கலில் பாரபட்சம் கூடாது

## றம்புக்கல விபசி தேரர்

(கொழும்பு)

எந்தவொரு இன மக்களுக்கும் எதுவித பாதிப்பும் இன்றிபுத்திக் கூர்மையுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசு அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும்என்று கண்டி மல்வத்த பீட மகாநாயக்க தேரர் றம்புக்கல ஸ்ரீ விபசி தேரர் தெரிவித்துள்ளார்.

உள்துறைஅமைச்சர்ஜோன் அமரதுங்கா தேரரை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேரர் அச்சந்திப்பின் போது தொடர்ந்தும் கூறுகையில், தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அதிகாரத்தை சகலவழிகளிலும் நிலைகளிலும் உருவாக்கி வருகிறார்கள்.

எனவே அவர்களுக்கு வேண்டிய வகையில் செயலாக்குவதற்கு இடமளிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். (உ-8)

# தென்மராட்சி புனரமைப்புப் பற்றி விரைவில் ஆய்வுப் பட்டறை

(தென்மராட்சி)

தென்மராட்சியில் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்புபுனர்நிர்மாணப்பணிகள் பற்றிய ஆய்வுப்பட்டறை ஒன்றினை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம் மேற்கொண்டுவருவதாக சங்கத்தின் இணைச்செயலாளரான இ. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர்மேலும் தெரிவிக்கையில், தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பிரதேசம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடமாக அமைதி நிலவுகின்ற போதிலும் அங்கு எவ்விதமான ஆக்கபூர்வமான பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஆதலால் இதுவிடயத்தில் முதற்கட்டமாக தமிழர்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நிதிப்பயன்பாடுபற்றியும் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளது எனக் கூறினார்.

இதுதொடர்பில் விரிவான ஆய்வுப்பட்டறை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் நடத்தப்படும் என்றும்தெரிவித்தார். (உ-77)

# தென்னிலங்கையின் அபிவிருத்திக்குஒதுக்கியநிதி வடக்கு-கிழக்கில் பயன்பாடு

(கொழும்பு)

தென்இலங்கையின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டு, இதுவரை செலவிடப்படாமல் இருந்த 310 இலட்சம் அமெரிக்க டொலர் வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்திக்குவழங்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சபை, ஆசிய அபிவிருத்திவங்கி அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையினைஅடுத்து இந்தப் பணம்பெறப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் எஸ் குமாரவேற்பிள்ளைதெரிவித்துள்ளார்.

இப்பணத்தில் இருந்து வடகிழக்கில் உள்ள 8 மாவட்டங்களுக்கும் சுகாதார சேவைகள் அபிவிருத்திக்காக தலா 10 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தொகையில்முதற்கட்டமாக 4 கோடி ரூபாவழங்கப்படவுள்ளது. மூன்று கோடி ரூபா வைத்தியசாலை கட்டிடங்களை கட்டுவதற்கும் ஒரு கோடி ரூபா அம்புலன்ஸ் மற்றும் வாகன வசதிகளுக்காகவும் செலவிடப்படவுள்ளது. (உ-8)

# ஸ்ரீ. சு. கட்சி, ஜே. வி. பி. கூட்டை எதிர்த்து சட்ட நடவடிக்கை

## பொ.ஐ.மு.வில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணிபோன்றகட்சிகள் இணைந்து கூட்டணியை ஏற்படுத்தினால் அதற்குஎதிராக சட்டநடவடிக்கை எடுக்கப் போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசியல் கட்சிகள் எச்சரித்துள்ளன.**

நாட்டின்அரசியல் நிலைமைகள் தொடர்பாக இவ்விரு கட்சிகளும் நீண்ட கலந்துரையாடலை நிகழ்த்தியுள்ளனர்.

ஆனால், பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஏனைய கட்சிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அத்துடன், இது பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் யாப்புக்கு முரணானது என அதில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சி என்று ஏனைய அரசியல் அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பட்சத்தில் இது குறித்து கட்சியின் ஏனைய உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டும் என லங்கா சமசமாஜக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய பத்தேகம சமிந்த தோர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா மகாஜனக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, தேசவிடுதலைமக்கள்கட்சி என்பன வற்றின் பிரதிநிதிகள் இவ்வார இறுதியில் கூடதற்போதைய அரசியல் நிலவரம்பற்றி பேச இருக்கின்றன.

மக்கள்விடுதலை முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன வற்றின் கூட்டு தொடர்பாகவும் இதில் ஆராயப்படவுள்ளது.

(உ-8)

## 'தம்ம' உபதேசத்தின்படி பலபிக்குகள்வாழ்வதில்லை

### களனி பல்கலை விரிவுரையாளர் கவலை

(பெல் மதுளை)

அனேகமான பிக்குமார்கள் இப்பொழுது ''தம்ம'' உபதேசங்களைப் பின்பற்றுவதில்லை மகாநாயக்கர்களுக்கு இது தெரிய வருவதுமில்லை.

இவ்வாறு களனிப்பல்கலைக்கழகத்தின் பாளி சமஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர் இந்து ராகார தம்மரத்ன தேரர் கூறியுள்ளார். பெல்மதுளையில் பிக்குகளுக்கான சமூகத் தலைமைத்துவம் பற்றிய பயிற்சிக் கருத்தரங்கில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்

இந்த நிலைமை நீடித்தால் பிக்குமாருக்கு பஸ்களில் ஆசனங்கள் கூட கிடைக்காமல் போய்விடும் என்றார் தம்மரத்தன தேரர்.

பத்திரிகைகளில் வரும் செய்திகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டிய தேரர் இம் மாதிரி நீசத்தனமான நடத்தைகளில் ஈடுபடும் பிக்குமார் குருமார்களுக்குரிய ஆடைகளை அணியக்கூடாது என்றார்.

பிக்குகளில் பலருக்கு தம்ம உபதேசம் பற்றி அறிவு நேயாகடந்த ஆண்டு பாளி- சமஸ்கிருதம் பாடங்களில் சித்தியடைந்த பிக்குமாரின் எண்ணிக்கை 10 வீதத்துக்கும் குறைவு பல்கலைக்கழகங்களில் சேரும் பிக்குகள் தம்ம போதனை விடுத்து இதழியல் பாடத்தை தெரிவு செய்கிறார்கள்

சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் படி இளைஞர் மத்தியில் புகைப்பவர்களின் எண்ணிக்கையில் பிக்குமாரே அதிகம் என்று கூறினார். தம்மரத்னதேரர்.

(பி)

## மின்சாரம் வழங்கும் நேரத்தினை நீடிக்குக!

(காரைநகர்)

காரைநகருக்கு மின்சாரம் வழங்கும் நேரத்தினை அதிகரிக்குமாறுகாரைநகர் வர்த்தக சங்கத்தினர் சித்தன்கேணி உப அலுவலகத்தைக் கோரியுள்ளனர்.

இப்பகுதிக்கு இதுவரைகாலமும் மாலை 6 30 தொடக்கம் இரவு 10.30 மணிவரையும் அதிகாலை4.30மணிதொடக்கம் 6 30 மணிவரையும் மின்சாரம்வழங்கப் பட்டு வந்தது

இந் நேரத்தினை அதிகரித்து காலையில் 7 மணிவரையும் இரவில் 11 மணிவரையும் மின்சாரம் வழங்கப்படவேண்டும் என அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(உ-246)

## சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபை

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச வலயம் ஒன்றின் சமுர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச் சபை தெரிவு அண்மையில் வேலணைப்பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

வேலணைப் பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் இடம் பெற்ற இத் தெரிவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு 15பேர் தெரிவு செய்யப் பட்டனர். (உ-75)

* * *

ஊர்காவற்றுறைப் பிரதேச சமுர்த்தி வங்கிக் கட்டுப் பாட்டுச் சபைத் தெரிவுக் கூட்டம் அண்மையில் ய/ ஊர்காவற்றுறைபுனித அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். கே. மகேந்திரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

15 கிராமஅலுவலர் பிரிவைச்சேர்ந்த சமுர்த்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர் தலைவராக திருமதிகே.இந்திராணி, உப தலைவராக திருமதி ஜெ. வசந்தகலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-75)

## சட்டவிதிகளை மீறிசமுர்த்தி வைப்பாளர்களின் பணம்

(கொழும்பு)

மத்திய வங்கியினால் மூடுவதற்கு உத்தரவிடப்பட்ட 'பிரமுக' சேமிப்பு அபிவிருத்தி வங்கியில் சட்டவிதிகளைமீறி சமுர்த்தி வைப்பாளர்களின் பணம் 170 மில்லியன் ரூபா வைப்பிலிடப் பட்டவிடயம் தெரியவந்துள்ளது.

சமுர்த்திவங்கி முகாமையாளர்கள் தமது தனிப்பட்ட நலன்களுக்காக சமுர்த்தி வைப்பாளர்களின் பணம் 170 மில்லியனை பிரமுக வங்கியில் வைப்புச் செய்திருந்ததாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் டாக்டர் நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதில் பல மாவட்டச்செயலாளர்களும் சம்பந்தப்பட்டுள்ளனா. சமுர்த்தி அதிகார சபையின் சட்டவிதிகளின்படி ஒருசமுர்த்தி வங்கி அமைப்பு 3 மில்லியனை மட்டுமே தனியார்வங்கியில் வைப்புசெய்ய முடியும்.

இவ்வாறிருக்க சமுர்த்தி வங்கிகள்பலவும் பெருமளவு பணத்தை வைப்புசெய்ததால் இப்பொழுது 170 மில்லியன் மூடப்பட்ட வங்கியில் வைக்கப்பட்டுள்ளது.

இதனால்சமுர்த்தி அதிகாரிகளும், பிரதேச செயலாளர்களும் கடும் நடவடிக்கைகளுக்கு உள்ளாகுவர் என்று நவரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

### மாநகரசபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தற்போது குடாநாட்டு மக்களைப் பெருமளவில்பாதித்து வரும் வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதென யாழ். மாநகரசபையில் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் யாழ். மாநகரசபை முதல்வர் எஸ். சுந்தையன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன,

★ கழிவு வாய்க்கால்களில் நீரைத் தேங்கவிடாது பார்த்துக் கொள்ளுதல்,

★ இது விடயத்தில் மாநகர சபை உறுப்பினர்கள் கூடுதல் கவனம் செலுத்துதல்,

★ நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாகவே மேற்கொள்ளல்,

★ புல், பூண்டு, குப்பை, கூழங்கள் என்பவற்றை சிரமதான முறையில் அகற்றுதல்.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்த போதிய ஆட்கள் இல்லாதிருப்பதனால் மேலும் ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் ஆகியவையாகும். (உ-7)

## நோர்வேத் தூதுவர் இடம் மாற்றப்படார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் நவீன வானொலி ஒலிபரப்புக் கருவிகளைப் பெறுவதற்கு உதவி வழங்கியதாக குற்றம் சாட்டப் பட்டிருக்கும் நோர்வேத், தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இடமாற்றம் செய்யப்படமாட்டார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளுக்கு வானொலி ஒலிபரப்புக் கருவியை வழங்குவதில் இவர் முன்னின்று செயல்பட்டார் என தெரிவித்த ஜனாதிபதி, தனது கடும் எதிர்ப்பை நோர்வே பிரதமர் ஜேல் பொண்டேவிற்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையிலே தூதுவர் வெஸ்பேர்க் இடமாறறப்படுவாரென்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகள் முக்கிய கட்டத்தை அடைந்திருப்பதனால் இவரை இடமாற்றம் செய்வது உசிதமல்ல என நோர்வே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு முடிவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தூதுவர் வெஸ்பேர்க்கின் இடத்திற்கு ஹென்ஸ் என்பவர் நியமிக்கப்படவுள்ளார் என்றும் ஆனால் இந்த நியமனம் தற்போது உடனடியாக நிகழாது என்றும்மேலும் தெரிவிக்கப்படுகிறது

(உ-3)

# அனுரா - மக்கள் விடுதலை முன்னணிக் கூட்டு மற்றோர் சதி நடவடிக்கைக்கு எடுத்துக்காட்டு

## புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இருதசாப்தங்களாக இடம் பெற்ற இனப் பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சிமுறை மூலம் தீர்வு காண்பதற்கு தற்போதைய அரசு முனைந்து வருகின்றது

இதனை நாட்டின் தலைவி என்ற ரீதியில் ஜனாதிபதியோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியோ எதிர்க்க முடியாது.

புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதேகருணாரட்ண இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்காவை கொலை செய்வதற்கான சதி முயற்சிகள் இடம் பெற்றுவருவதாக அண்மையில் செய்திகள்வெளியாகியுள்ளன.

அவரின் சகோதரரும்பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினருமான அனுராபண்டாரநாயக்காவுக்கும மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே உள்ள கூட்டே இச்சதிமுயற்சிக்கு காரணம் ஆகும்

மக்கள்விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேரும் எந்தவொரு உறுப்பினரையோ அன்றி கட்சியையோ மக்கள் விடுதலை முன்னணி தனதுசதி வலையில் சேர்த்துக் கொள்ளும்.

மக்கள் விடுதலைமுன்னணியுடன் அனுராபண்டாரநாயக்கா சேர்ந்து இருப்பதனால் நாட்டில் மற்றுமோர் பயங்கரவாதச் சதிஇடம்பெறலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

## அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களை திருப்பியனுப்பும் பிரிட்டன் அரசின் முடிவை

## மீள் பரிசீலனைக்கு உட்படுத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களை நாடு கடத்துவது தொடர்பில் அந்நாட்டு அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தவேளையில் இவ்வாண்டு பிரிட்டனில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ரெட்பிரிட்ஸ் தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத் தமிழரான தவத்துரை ஜெயரஞ்சன் இலங்கை வந்துள்ளார்.

இவர் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு நேரில் சென்று தமிழரைத் திருப்பியனுப்பும் பட்சத்தில் அவர்கள் மீளக்குடியமரும் சூழ்நிலை உருவாகிவிட்டதா என்ற நோக்கிலும் அவர்கள் மீள்குடியமரும் பட்சத்தில் பொருளாதார நிலைமைகள் எப்படி அமையும் என்பது குறித்தும் ஆராய்வுகளையும் நேரடி அறிவித்தல்களையும் மேற்கொண்டு வருகிறார்.

தவிரவும் இலங்கை அரச தரப்பின் ஊடாக இலங்கைத் தமிழரை திருப்பியனுப்பும் பிரிட்டன் அரசின் முடிவுகளை மாற்றியமைக்கும் வகையிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் ஜெயரஞ்சன் புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியமர்த்துகை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுடன் விரைவில் சந்தித்துப் பேசவுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் எமது வலம்புரிக்கு அவர் தகவல் தருகையில்;

தற்போதைய இலங்கை நிலைவரங்கள் குறித்த அறிக்கையினை பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களூடாக, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து இலங்கை அகதிகளை திருப்பியனுப்பும் தீர்மானத்தை ஒத்திவைப்பது அல்லது இடைநிறுத்துவதே எனது நோக்கம்.

பிரிட்டன் எடுத்து வரும் திருப்பியனுப்பும் நடவடிக்கைகளால் அங்கு அரசியல் தஞ்சம் கோரியுள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள், நிம்மதியைத் தொலைத்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

தமது பிள்ளைகளின் எதிர்காலம், அவர்களின் கல்வி, மீளக்குடியமரும் பட்சத்தில் பொருளாதாரம் ஈட்டும் வழிகள் ஆகியன குறித்து அவர்கள் மிகுந்த மனக்கவலையடைந்து காணப்படுகின்றனர்.

இனப் பிரச்சினைக்கு சரியான தோர் தீர்வு நிரந்தரமாக காணப்படாத பட்சத்தில் இலங்கைத் தமிழரைத் திருப்பியனுப்புவது நல்ல முடிவாக இருக்க மாட்டாது என்று சுட்டிக்காட்டினார். (உ)

## பொதுக் கூட்டம்

(கல்வயல்)

நல்லூர் ஸ்ரீவாலயம்மன் ஆலய பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது. (உ-111)

## சிறுவர்களுக்கு கைவிலங்கு மாட்ட முடியாது

### தயா சோமசுந்தரம் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு தனியான பிரிவு அமைப்பு ரீதியாக இருக்கின்றபோதிலும் கூட, யாழ் மாவட்டத்திலுள்ள பொலிஸ்நிலையங்களில் அவை நடைமுறையில் செயல்படுவதில்லை என பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களெனச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படும் சிறுவர் மற்றும் பெண்களை ஏனையவர்களுடன் ஒன்றாகக் கருதி விசாரணை செய்யும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல்வேண்டும் எனவும் கைதுசெய்யப்படும் சிறுவர்களுக்கு கைவிலங்கு மாட்டப்படும் நடைமுறையையும் இல்லாமல் செய்யவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், யாழ். மாவட்டத்தின் ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்களின் போது எக்காரணம்கொண்டும் சிறுவர்களைப் பங்கு கொள்ள அனுமதிக்கவேண்டாம் என்றும் சிறுவர்களின் கல்வியைப்பாதிக்கும் காரியங்களில் இருந்து பொதுஅமைப்புகள் விலகிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-77)

## உயர்பாதுகாப்பு வலய ஆலயத்தில் வழிபாடு

(வவுனியா)

அதிஉயர்பாதுகாப்புவலயத்தினுள் அமைந்துள்ள ஓமந்தை சித்திவிநாயகர் ஆலயத்தில் தைப்பொங்கல் தினத்தன்று பூஜை மற்றும்பொங்கல் வழிபாடுகளைச்செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் மாலை தாண்டிக்குளம் குரு வெளி உயர்தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் படையினருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வுறுதியளிக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் பின்னர் தாண்டிக்குளம் தொடக்கம் ஓமந்தை வரையிலானபிரதேசம் அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இவ் உயர்பாதுகாப்பு வலயத்தினுள்ளே சித்திவிநாயகர் ஆலயமும் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## எச். ஐ. வி. தொற்று வீதம் இலங்கையில் அதிகரிப்பு

### அனேகர் குழந்தைகளாம்

(ஈச்சமோட்டை)

எச். ஐ. வி. தொற்றுக்கு உள்ளாகும் குழந்தைகளின் வீதம் இலங்கையில் அதிகரித்துள்ளது. எனவே தாய்மாருக்கு இதுகுறித்த விழிப்புணர்வு அவசியம்.

இவ்வாறு வடமத்திய மாகாண பொதுசுகாதார பணிப்பாளர் டாக்டர் டி. டபிள்யூ. எம். பாலித பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் எயிட்ஸ் விழிப்புணர்வு குழுவினரால் எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கொன்று நடைபெற்றது.

இதில் கருத்துரை வழங்கிய டாக்டர் பாலித பண்டார எயிட்ஸ் நோய்காரணமாக இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விளக்கினார்;

கடந்த காலங்களில் தாயிடமிருந்து குழந்தைக்கு 0.4 வீதமே எச். ஐ. வி. கடத்தப்படுவதாக தரவுகள் சுட்டிக்காட்டின- ஆனால் தற்போது இது 9 வீதமாக உயர்வடைந்துள்ளது.

எனவே எச். ஐ. வி தொற்றுடைய தாய்மார் கர்ப்பந்தரிக்காது இருப்ப தேசாவும் சிறந்தது என்றார்.

மேலும்எச். ஐ. வி. பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் போது மக்களின் மனங்களில் இலகுவில் பதியக் கூடியவாறானமுறையில் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து கருத்தரங்கில் பங்கு பற்றியவர்களது சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

இக்கருத்தரங்கில் பல்வேறு திணைக்களத்திலிருந்தும் ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

## புதிய நிர்வாகிகள்

(சங்கானை)

மல்லாகம் வீதி சங்கானை பாலவைரவர் ஆலய பரிபாலனசபை பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த ஞாயிறன்று இடம்பெற்றது.

இதில் தலைவராக கவ அரசன் செயலாளர் அ. தர்ம குலசிங்கம் பொருளாளர் ஆ கதிரவேலு ஆகியோரும் பதினொரு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-123)

## நோயாளர் ஏமாற்றம்

(திருநெல்வேலி)

அராலி மத்தி கோட்டைக்காடு கிராமியவைத்தியசாலையில் நிரந்தரவைத்தியர் இன்மையால் சிகிச்சைபெறச் செல்லும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் தினமும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

பருவமழை காரணமாக பல்வேறு நோய்களுக்கும் ஆளாகியிருக்கும் வட்டுக்கோட்டை துணைவி வடக்கு பகுதிமக்களோ காலை வந்து காத்திருந்துவிட்டு இவ்விதம் ஏமாற்றத்துடன் செல்கின்றனர்.

இதேவேளை இவ்வைத்திய சாலையில் பதில்வைத்தியராக கடமையாற்றுபவர் பி.ப 1.30மணிக்குப் பின்னரே பணியை ஆரம்பிப்பது குறிப்பிடத்தக்கது. (உ-43)

## வி. கழகங்களை பதிவு செய்தல்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களை, 2003 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கழகங்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில்பங்குபற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 6 ஆம்திகதிக்கு முன்னதாக பெற்றுக்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவு விளையாட்டுஉத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (உ-246)

## கூ.கா.குழுவின் அறிக்கைக்கு புதிய இடதுசாரி முன்னணி கண்டனம்

(கொழும்பு)

யுத்தநிறுத்தத்தினைப் பேணுவதற்கு அரசபடைகளினதும். தமிழீழ விடுதலைப் புலிகளினதும் சமபலம் வேண்டும் எனவே, இதன் காரணமாக அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படக் கூடாது 'என கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையை இடதுசாரி முன்னணி வன்மையாக கண்டிக்கிறது.

புதியஇடதுசாரி முன்னணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் இதுசம்பந்தமான அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில்,

சமபலம் பேணல் என்ற பேரில், அதியுயர் பாதுகாப்பு வலயம் என்றபோர்வையில் பலகுடியிருப்புமற்றும்மிக வளமான விளை நிலங்கள் என்பவற்றைப் படையினர் வைத்திருப்பதாவது அப்பட்டமான ஆக்கிரமிப்பு ஆகும்,

இலங்கை இராணுவத்தின் இந் நடவடிக்கையை நியாயப்படுத்த கண்காணிப்புக் குழு முன்வந்துள்ளமை மிகுந்த கவலையைத் தருகிறது.

அத்துடன் பாதுகாப்புக்கு தீங்குவிளைவிக்கும் விதத்தில் அபிவிருத்தி மற்றும்முன்னேற்றம் என்ற பேரில் நடைமுறைக்கு ஒவ்வாத இயக்கு நிலையினைத் தோற்றுவிக்கும் விதத்தில் அமைந்த இத் திட்டத்தினை செயற்படுத்தக் கூடாது.

கண்காணிப்புக் குழுவின் நிலைப்பாடானது அடிப்படை மனிதஉரிமைகளுக்கே ஆப்புவைக்கும் செயலாகும் என்றுள்ளது. (உ-10)

## விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும்

### அரசு - புலிகளுக்கு அலிசாகீர் அறிவுரை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே தற்போது வெற்றிகரமாக சமாதான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் இருதரப்பினரும் அதிஉயர் பாதுகாப்புவலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பான விடயத்தில் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலி சாகீர் மௌலான தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் அமைக்கப்படவுள்ள தபால் கந்தோருக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

இந்தவிடயத்தில் ஐக்கிய தேசியமுன்னணி அரசு விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளும் என நான் நம்புகிறேன்.

அதிஉயர்பாதுகாப்பு வலய பிணக்கினால் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் தடைப்படும் என எவரும் கவலைப்படத்தேவையில்லை.

அரசாங்கமும் தமிழீழவிடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முழு நம்பிக்கையுடன் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ் அடிக்கல் நாட்டும்வைபவத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யன் கிழக்குப் பிராந்திய தபால் அத்தியட்சகர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ-8)

## தாக்குதலைத் தடுத்த பொலிசுக்கு கத்தி குத்து

(நீர்கொழும்பு)

பஸ்ஸை வழிமறித்து சாரதி நடத்துநர், ஆகியோரையும் பஸ் பிரயாணிகளையும்தாக்கி குழப்பம் விளைவித்த காடையர் கும்பலைத் தடுக்க முனைந்த பொலிஸ் அதிகாரி கத்திக்குத்துக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சபை பஸ் வண்டியொன்று தியகை முல்ல என்ற இடத்தில் சைக்கிளில் வந்த ஒருவரை மோதவிருந்த நிலையில் அவர் தப்பிவிட்டார்; இதையடுத்து அங்கு வந்த கும்பல் ஒன்று பஸ்ஸினுள் புகுந்து சாரதியையும் நடத்துநரையும் பிரயாணிகளையும் தாக்கியுள்ளது.

இவ் வேளை, அவ் வழியாக வந்த இரு பொலிஸ் அதிகாரிகள் தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்து குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

இதே சமயம் அங்கு வந்த இன்னொரு குழுவினர் மீண்டும் தாக்குதலில் இறங்கி பொலிஸாரையும் தாக்கி ஒருவரைக் கத்தியாலும் குத்திக் காயப்படுத்தியுள்ளது.

விடயம் அறிந்த நீர்கொழும்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறிபால உசட்டி தலைமையில் வந்த பொலிஸ் குழு தாக்குதலில் ஈடுபட்ட கும்பலைக் கைது செய்து கொண்டு சென்றது. பொதுமக்கள் பத்து பேர் வரை காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். (பி)

ஈராக் மீதான போருக்கு

# வளைகுடா போரை விட அதிக செலவு ஏற்படும்

## அமெரிக்க அதிகாரிகள் கணிப்பு

(வாஷிங்டன்)

1991ஆம் ஆண்டு நடைபெற்ற வளைகுடா யுத்தத்திற்கு 6 ஆயிரத்து 100கோடி அமெரிக்க டொலரைச் செலவு செய்த அமெரிக்கா தற்போது அதனைவிட அதிகமான தொகையை ஈராக்கிற்கு எதிரான யுத்தத்திற்குச் செலவிட தயாராகியுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை புஷ் நிர்வாகம் மிகத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் உத்தரவிடும் போது ஈராக் மீது இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்க சகல ஒழுங்குகளையும் யுத்தத்திற்கான அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

இதற்கான செலவினைத் தற்போது மதிப்பிட முடியாதெனவும் மேற்குறிப்பிட்ட தொகை ஒரு உத்தேசத் தொகையெனவும் வெள்ளை மாளிகையினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வெள்ளை மாளிகையின் பொருளாதார ஆலோசகர் லோறன்ஸ் ஜிம்பே கூறுகையில்,

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அமெரிக்கா மீது பதில்த் தாக்குதலை நடத்தினால் அமெரிக்கப் பொருளாதாரம் பெரும் பாதிப்படையும் ஒரு நிலைப்பாடும் காணப்படுகின்றது.

அதேவேளை, அமெரிக்கா தனது மொத்த உள்ளூர் உற்பத்தியில் இரண்டு சதவீதத்தை ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தில் செலவிட வேண்டி ஏற்படும் என்றார். (பி-2)

# புத்தாண்டில் பிரி. மக்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்கள்

## பிரதமர் பிளயர் எச்சரிக்கை

(லண்டன்)

ஈராக் மீதான யுத்தம் மற்றும் பிரிட்டன் மீதான பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்கள் ஏற்படலாமென்ற ஆபத்தான காலகட்டத்தை பிரிட்டிஷ் மக்கள் எதிர் நோக்கியுள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளயர் தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு கஷ்டங்களைக் கொண்டதும் ஆபத்தானதுமான பிரச்சினைகள் இதற்கு முன் ஒரு போதும் பிரிட்டனில் ஏற்பட்டதில்லை.

மத்திய கிழக்கு விவகாரத்தில் உலகத் தலைவர்கள் ஈடுபட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வரை மத்தியகிழக்கு நாடுகள் எதுவும் பாதுகாப்பாய் இல்லை என்றும் கூறிய ரொனிபிளேயர்,

ஈராக் விடயத்தில் சதாம் ஹுசைனிடமிருந்து சமாதான முறையில் ஆயுதக் களைவை மேற்கொள்ள வேண்டும். இது முடியாது போகும் சந்தர்ப்பத்தில் ஈராக் மீது பலவந்தமான கடைசி நடவடிக்கையை எடுக்கநேரும் என்றும் கூறியுள்ளார். (பி-2)

# துருக்கி பஸ்விபத்தில் 11 பேர் பலி; 20 பேர் காயம்

(அங்காரா)

துருக்கியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பேருந்து விபத்தில் 11பேர் கொல்லப்பட்டதுடன் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து ஆற்றுக்குள் வீழ்ந்ததில் இவ்விபத்து நேர்ந்துள்ளது என்றும்.

ஆற்றில் வீழ்ந்த பேருந்து மற்றும் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணிகள் தொடருவதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன. (பி-2)

# ஜனாதிபதி மன்னித்தால் சரணடையத் தயார்

(புதுடில்லி)

ஜனாதிபதி தன்னை மன்னிப்பாரானால் சரணடைவதற்குத் தயாராகவிருப்பதாக சந்தனக் கடத்தல் வீரப்பன் கூறியுள்ளார் எனத் தகவல் ஒன்று வெளியாகியிருக்கின்றது.

பொள்ளாச்சி மகாதேவசாமி எழுதிய முன்னாள் கர்நாடக அமைச்சர் நாகப்பாவின் கொலை விவகாரம் தொடர்பான புத்தகத்திலேயே இத்தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை இப்புத்தக வெளியீட்டை முன்னிட்டுச் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய பொள்ளாச்சி மகாதேவசாமி சந்தனக் கடத்தல் வீரப்பன், கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம் கிருஸ்ணா, மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டோஸ் ஆகியோரை நம்பியிருப்பதாகக் கூறியிருந்தார். (பி-2)



பிரிட்டன் நாட்டின் 'லகான்' என்ற அணிக்கும், தூதர்ஷனன் அணிக்கும் இடையே புதுடில்லியில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. போட்டித் தொடக்க விழாவில் கலந்து கொண்ட மத்தியத்தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ்ஜிக்கு பிரிட்டிஷ் அணி வீரர்கள் அறிமுகப்படுத்தப்படுகிறார்கள்.

வடகொரிய அணுக் கொள்கை

# பொருளாதார அழுத்தம் கொடுக்க ஜப்பான் முடிவு

(டோக்கியோ)

வடகொரியாவின் அணு ஆயுதக் கொள்கையின் காரணமாக ஜப்பான் அந்நாட்டுக்கான இருதரப்பு வர்த்தகம் தொடர்பாக சில அழுத்தங்களை மேற்கொள்ளவிருக்கிறது.

வடகொரியாவின் பிரதான வர்த்தகப் பங்காளியான ஜப்பான் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வர்த்தக உறவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவுள்ளது.

ஜப்பானுடனான வடகொரியாவின் பிரதான ஏற்றமதியான துணி, கப்பல் சம்பந்தமான பொருட்களை இறக்குமதி செய்வதையும் துறைமுக வசதிகள் செய்வதை முக்கியமாகக் கட்டுப்படுத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. (பி-2)

## தகவல் தருபவருக்கு சன்மானம் ரூ.5 கோடி


(புதுடில்லி)

சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்க அடையாளம் காட்டுபவருக்கு வழங்கப்படவுள்ள சன்மானம் 5கோடி ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

நாகப்பா கொலை தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி வைத்திய நாதன் தலைமையில் விசாரணைக்கான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும்,

வீரப்பனைப் பிடிக்க தமிழக அரசு ஒத்துழைக்கவில்லையென்றும் கர்நாடக அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் வீரப்பனைப் பிடிப்பதற்கான அடையாளங்களைக் காட்டுபவருக்கான சன்மானத் தொகை 5கோடி ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதற்கு முன்னர் வீரப்பனின் தலைக்கு இரண்டு கோடி ரூபா சன்மானம் வழங்கப்படுமென அறிவித்திருந்தமைதெரிந்ததே(பி-2)



பிலிப்பைன்ஸ நாட்டில் உள்ள ட்யூபா என்ற குன்றின் மீது, 1970ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பர்டிநேன்ட் மார்கோஸின் மிகப் பெரிய உருவச் சிலை, குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட புகைப் படம்.

WORLD NEWS உலக தரிசனம்

# குற்றச் செயல்கள் வியட்நாமில் நாளுக்கு நாள் அதிகரிப்பு

## போதைவஸ்து காரணம்

(ஹனாய்)

கமியூனிஸ்ட் நாடான வியட்நாமில் போதைவஸ்துடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதுடன் அந்நாட்டின் ஏனைய குற்றச்செயல்கள் 10சதவீதத்தால் உயர்ந்துள்ளதென அறிக்கையொன்று கூறுகின்றது.

2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2002ஆம் ஆண்டு நவம்பர் வரையிலான காலப்பகுதியில் தெற்காசிய நாடுகளுடன் வியட்நாம் 14ஆயிரம் தடவைகள் போதை வஸ்து கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

80மில்லியன் சனத்தொகை கொண்ட வியட்நாமில் ஒருலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் போதைவஸ்துக்கு அடிமையாகியிருக்கின்றனர். இந்த எண்ணிக்கை வருடாந்தம் 10சதவீத்தால் உயர்வடைந்து செல்வதாக அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

சர்வதேச ரீதியில் போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபடும் லாலோஸ் கொலம்பியா மற்றும் ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் பாதையாக வியட்நாம் செயற்படுவதாக ராய்டர் செய்தியும் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. (பி-2)

# ஆஸி. அகதிமுகாமில் தீ ! 2மில்லியன் டொலர் நஷ்டம்

(கான்பெரா)

அவுஸ்திரேலியாவின் தென் பகுதியிலுள்ள அகதிகள் தடுப்பு முகாமொன்று தீப்பிடித்து எரிந்துள்ளது. இதனால் ,சுமார் 2மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 4மாதங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட அகதிகளுக்கான தடுப்பு முகாமே தீப்பிடித்து எரிந்துள்ளது.

இந்தத் தடுப்பு முகாமில் மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 215அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அகதிமுகாமில் தீப்பற்றிக் கொண்டதையடுத்து அகதிகள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இக்கட்டடத்தில் தீப்பற்றிக் கொண்டதற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.(பி-2)



ஐரோப்பாவின் பெயிரட் நகரில் அண்மையில் நடைபெற்ற மிஸ் ஐரோப்பா - 2002 அழகிப் போட்டியில் மிஸ் ஐரோப்பாவாக முடிசூட்டப்பட்ட ரஷ்யாவைச் சேர்ந்த ஸ்வெட்லாவா கலோலிவர்வையும், போட்டியில் கலந்து கொண்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அழகிகளையும் படத்தில் காணலாம்.


# விடைபெறும் 2002





தாயகம் திரும்பிய பாலாவுடன் தானைத் தலைவன்


புலிகளின் யாழ்.வருகையும், வரவேற்புக் கூட்டமும்


பாதை திறப்பு பயணம் தொடர்கிறது

தாய்லாந்தில் நடந்த இரண்டாம் சுற்றில் இருதரப்பினரும்





தாய்லாந்தில் புலிகளின் பிரதிநிதிகள்

தானைத் தளபதிகள் முக்கிய ஆலோசனையில்

மிலிந்தவுக்குக் கைகொடுக்கும் கருணா






நோர்வேப் பிரமுகர்கள் பிரபாவுக்குக் கைலாகு

பீரிஸுடன் பாலா

ஆர்வமாய்ப் பேசும் நோர்வேத் தூதுக்குழு





செயலக மாநாட்டில் நோர்வேத் தூதுக் குழு


பிரதமராகப் பதவியேற்ற ஆனந்தக் களிப்பில்



முப்படைகளும் தனது கட்டுப்பாட்டில் என்ற இறுமாப்பில் ஜனாதிபதி

# விடைபெறும் 2002

## பிறநாட்டுப் பிரமுகர்களுடன் புலிகளின் பிரதிநிதிகள்







## உள்ளத்தை உருக்கும் காஞ்சிரங்குடாப் படுகொலைகள்








# இந்து ஆலய அறங்காவலர்கள் ஒழுக்கம் பேணி உயர்வதற்குச் சட்டக்கோவை அவசியமானது

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய ஒழுக்க வாழ்வை உயிரினும் மேலாகக் கருதி ஒழுக்க நெறியில் வாழ்பவர்கள் பெரு நெறியாளர்கள் -சான்றோர்கள் என்று போற்றப்படுகின்றனர். தர்மசொரூபம் அறநெறி தான். இந்து ஆலயங்களைப் பரிபாலிக்கின்ற அறங்காவலர்களும் அந்த அற நெறியாம் ஒழுக்க நெறிக் குட்பட்டவர்களே. ஆலய அறங்காவலர்களின் ஒழுக்கத்தோடு ஒன்றிய தூய அறநெறி வாழ்வு தான் இந்து ஆலய பரிபாலனத்தின் வெளிப்பாடாகும். பல தரப்பட்ட மக்களை பக்தி நெறி என்ற அருள் நெறியில் ஒன்று சேர்த்து மனம் ஒன்றி ஆன்மா லயப்பட்டு, வசப்பட்டு, வழிபட்டு நிற்கும் இடமே ஆலயமாகும். இன்றும் என்றும் விளங்க வைத்துக்கொண்டிருப்பவை ஆலயங்களே. இந்து ஆலயங்களின் ஒவ்வொரு அமைப்பும் பூசைகள், உற்சவங்கள், கிரியைகள் அத்தனையும் ஒவ்வொரு விளக்கத்துடன் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு, ஆகம நெறி நின்று தான் செயல்வடிவம் பெற்று நடைபெற்று வருகின்றது ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் அர்த்தமும் விளக்கமும் உண்டு. எனவே ஆகம விதியின் அற நெறிகளமைய இந்து ஆலய நிர்வாகம் செயல்பட வேண்டுமென்பது தான் விதி முறையாகும்.

### அறங்காவலர்கள்

இந்து ஆலயங்களை நிர்வகிப்பவர்கள் தான் அறங்காவலர்கள். அரச சொத்தான ஆலயங்களை அறநெறி நின்று பாது காத்து பரிபாலிப்பவர்கள் தான் அறங்காவலர்கள் இவர்களின் வாழ்க்கை நெறி மற்றவர்களின் வாழ்விற்கு முன் உதாரணமாக எடுத்துக் காட்டாக அமையவேண்டும். 'தன்நெஞ்சறிவது பொய்யற்க' என்ற வாறு மனச்சாட்சியோடு தெய்வம் என்ற மனப் பான்மையோடு அறங்காவலர்கள் என்ற பெயருக்குரியவாறு வாழ்வை அமைத்துக் கொண்டு அறச்சிந்தனையோடு கூடிய அறவாழ்வு வாழ்ந்தால் அவர்கள்தான் அறங்காவலர்கள் என்ற பெயருக்கு அருகதை உடையவர்கள். அப்படியான அறங்காவலர்களால் நிர்வகிக்கப் படுகின்ற ஆலயங்களில் நிர்வாகச் சீர்கேடுகளோ பிணக்குகளோ ஏற்படுவதில்லை.

இந்து ஆலய அறங்காவலர்களிற்கு ஒழுக்கநெறி அத்தியாவசியமானதாகும் ஆலய நிர்வாகத்தின் அறத்தூய்மையை வெளிப்படுத்துவது அறங்காவலர்களின் நானாந்த வாழ்க்கை நெறி. அவர்களின் வாழ்க்கை இந்து அறநெறியாகிய வரையறைக் குள் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். செயற்பாடுகளும் அதையொன்றியதாக இருக்க வேண்டும்.

### பரிபாலனசபை

தனியார் ஆலயங்களைத் தவிர்ந்த பொது ஆலயங்களை பரிபாலிப்பவர்கள் அறங்காவலர் சபை என்ற பரிபாலன சபையாக செயல் பட்டாலும் ஒவ்வொரு அறங்காவலர்களும் அறநெறி என்ற ஒழுக்க நெறிக்கு உட்பட்டவர்களே பத்து அறங்காவலர்களைக் கொண்ட அறங்காவலர் சபையில் ஒரு அறங்காவலர் ஒழுக்கநெறிக்கு ஊறு தரும் செயல் பாட்டில் செயல் படுவாராயின், அவ்வறங்காவலர் சபைக்கும் அனைத்து அறங்காவலர்களின் தூய நெறி வாழ்விற்கும் மாசு கற்பித்து விடுகின்றது. எனவே அறங்காவலர்கள் தனித்தும் ஒருமித்தும் தூய ஒழுக்க நெறிக்குட்பட்டவர்கள் என்ற கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும்.

இநது ஆலய அறங்காவர்களை ஒழுக்க நெறி என்ற சட்டம் கட்டுப் படுத்துகின்றா என்றால் இல்லை. அப்படியான ஒரு சட்டம் சட்டபூர்வமாக செயல் படத் தொடங்குமானால் பல ஆலயங்களில் நடை பெறுகின்ற ஊழல்கள் பிணக்குகள்நிர்வாகச் சீர்கேடுகள் தானே அகன்று விடும்.

### தெய்வ நீதி தீர்ப்பு வழங்கும்

'உன்னைத் திருத்து உலகம் தானே திருந்தும்'என்பது ஞானிகளின் அருள்வார்த்தை. அதே போன்று அறங்காவலர்கள் இப்படித்தான் வாழ வேண்டும என்ற இலட்சிய உணர்வோடு வாழக் கற்றுக்கொளளவேண்டும். எப்படியும் வாழலாம் என்ற உணர்வோடு வாழ்பவர்கள் அறங்காவலர்கள் என்ற புனிதப் பணிக்கு முற்றிலும் அருகதை அற்றவாகள் பணம் பதவி செல்வாக்கின் அதிகாரத்தால் அறங்காவலர்களாகத் தெரிவானாலும் ஆண்டவன் நோக்கில் அவர்கள் அருகதை அற்றவர்களே. சிவ சொத்து குலநாசம் என்றவாறு தெயவ நீதி என்றோ ஒரு நாள் அதறகுரிய தீர்ப்பை வழங்கியே தீரும். அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் என்ற ஞானிகளின் அருள்வாக்குகள் என்றுமே பொய்த்தது கிடையாது. எனவே ஆலயங்களை நிர்வகிக்கின்ற அறங்காவலர்களிற்கு ஒழுக்க நெறி என்ற அறநெறி வாழ்வு மிக மிக முக்கியமான ஒன்றாகும். காவியுடுத்து விபூதி தரித்து உருத் திராக்கம் தாங்கி வாழுங்கள என்று கூறவில்லை 'உள்ளக்கமல மடி உத்தமனார் வேண்டுவது' என்று சுவாமி விபுலானந்தர் சொன்னவாறு நெஞ்சத்தில் அழுக்கற்ற தூய சிந்தனை, செயலிலே தூய்மை, வாழ்விலே தூய்மை அது தான் அன்போடு இணைந்த அறநெறி வாழ்வு.

பசு தரவையில் அல்லது எங்கு மேய்ந்தாலும் ஒழுங்காக மேய்ந்து செல்லும். வெள்ளாடு புல் தரையில் விட்டாலும் ஒழுங்காக மேயாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் கடித்து புலதலைல் தரவையை நாசப் படுத்தி விடும் அதே போன்று பசு போன்றவர்கள் ஒருஆலயத்தோடு மட்டும் நின்று தமது பணியை பரிபூரணமான நிறை வான பணியாகச் செய்து முடிப்பார்கள். வெள்ளாடு போன்றவர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட ஆலயங்களிலும் தலையை நீட்டி அனைத்திலும் நிறைவான பணியை ஆற்ற முடியாதவர்கள் ஆகி விடுகின்றனர். பெயரளவில் அறங்காவ லர் என்ற நிலை இருக்கக் கூடாது.

புன்நெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்நெறி ஒழுகச் செய்கின்ற இந்து ஆலய அறங்காவலாகளை நாம் உருவாக்க வேண்டுமானால இந்து ஆலய அறங்காவல்களுக்கென சட்டபூர்வமான ஒழுக்க நெறிக் கோவை ஒன்று தேவை என்பதை சைவச் சான்றோாகள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ஒழுக்க நெறிதான் அறங்காவலர்களின் உயிர் மூச்சாகும்.

**நயினை**
**நா. கோபாலகிருஷ்ணன்**
(தலைவர் சப்ததீவக திவ்யஜீவன சங்கம்)

## மகாபொல பெறுபவர்களின் பெயர்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் 2002/2003 ஆம் கல்வி ஆண்டில் புதிதாக அனுமதிபெறும் மாணவர்களில் மகாபொல புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை, இப்புலமைப் பரிசிலிற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை யாழ். பல்கலைக்கழக மாணவர் நிலைய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என நலச்சேவைகள் உதவிப்பதிவாளர் யோ. ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

(உ-9)

## புனரமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்தம் காரணமாக அழிவடைந்த நிலையில் உள்ள யாழ் மாநகராட்சி மன்றத்தின் பழைய கட்டடத்தை புனர்நிர்மாணம் செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், யாழ். மாநகர முதல்வர் எஸ்.கந்தையன் புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கு மகஜர் ஒன்றினையும் அனுப்பிவைத்துள்ளார்.

(உ-16-7)

# சமஷ்டியை நியாயப்படுத்தும் பிக்குகள் தேசத் துரோகிகள்

### கங்கொடவில சோமதேரர் லங்காதீபவுக்கு பேட்டி

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கின் நெருக்கடிக்கு இப்பொழுது செய்யக் கூடியது ஒன்றுமில்லை. அது நன்றாக முற்றிவிட்டது. இதன் தீர்வுக்கு என்னிடமுள்ள திட்டத்தை இப்போது வெளியிடமாட்டேன். அதனை மக்கள் சரியாக புரிந்து கொள்ளும் பக்குவ நிலையில் இல்லை. அதனை இன்றே கூறினால் அதனை பலவிதமாக திரித்துக் கூறக்கூடிய குழுக்கள் உள்ளன. அதனை உரிய நேரத்தில் நான் வெளியிடுவேன் இந்தப் பிரச்சினைய்யத் தீர்க்க முடியும்.**

இவ்வாறு புதிய அரசியற்கட்சியொன்றை ஆரம்பித்துள்ள பிரபல பௌத்த 'பிக்கு கங்கொடவில்ல சோம தேரர் லங்காதீப பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு ஏற்கனவே கையளிக்கப்பட்டுவிட்டது. அதனை சாதாரணமாக எம்மால் மீட்க முடியாது அதற்குரிய பலம் எமக்கு இருத்தல் வேண்டும்.

அந்தப்பலத்தை நாம் பெறுவதற்கு பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும். நாட்டின் பொருளாதாரம் யுத்தத்தினால் சீரழிந்து விட்டதென்று கூற முடியாது.

யுத்தங்கள் உலகின் பல இடங்களிலும் எப்போதும் தான் நடந்து கொண்டிருக்கின்றன. நாட்டின் நிர்வாகம் தவறாக முகாமைப் படுத்தப்படுவதன் காரணமாகவே பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

யுத்தத்திற்கு 80 பில்லியன் பணத்தைச் செலவிட்ட நாம் அவசியமற்ற பொருட்களின் இறக்கும திக்கு120 பில்லியனை செலவிடுகி றோம்.

சில பௌத்த பிக்குமார் 2,3,நாட்களில் சமஷ்டி அமைப்புப் பற்றிக் கற்றுக்கொள்ளலாம் என்று நினைத்து வெளிநாடு சென்றிருக்கிறார்கள் அவர்கள் இலங்கை வானொலி கலந்துரை யாடல்கள் மூலம் சமஷ்டியை நியாயப்படுத்துகிறார்கள் இவர்கள் நாட்டிற்கு துரோகம் செய்கின்றனர். இவ்வாறு தனது பேட்டியில்தேரா மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)



**நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற நிதர்சனம் நிறுவனத் தயாரிப்பில் உருவான கடலோரக் காற்றுத் திரைப்பட வெளியீட்டு விழாக் காட்சிகள்.**








# கடலோரக் காற்று வவுனியாவிலும் வெளியீடு

(வவுனியா)

கடற்புலிகளின் பத்தாம் ஆண்டு நிறைவாக நிதர்சனத்தின், சிறப்பு வெளியீடான கேசவராஜனின் 'கடலோரக்காற்று' முழு நீளத் திரைப்பட ஒளிப்பேழை வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த கதிரவன் தலைமையில் இவ் வெளியீட்டுவிழா நடை பெற்றது.

இந்த ஒளிப்பதிவுப்படப் பேழையின் முதற்பிரதியை கடற்புலிகளின் தாக்குதல் படைத்தளபதி சலீமிடமிருந்து வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் மக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். (வ)

## பேமத்திரின் மருந்துதெளிப்பு

(சுதுமலை)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஆனைக்கோட்டை, சுதுமலை, நவாலி, மானிப்பாய் பகுதியில் நுளம்பு வலைகளுக்கு பேமத்திரின் மருந்து தெளிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு ஆனைக் கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

(உ-252)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

## கணனிப் பயிற்சி நெறிகள்

**ஜனவரி 2003ல் ஆரம்பம்**

**1000க்கும் மேற்பட்டவர்களுக்குக் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்று அரச சான்றிதழ் வழங்கிய ஒரே நிறுவனம்**

| | |
|---|---|
| கணனி அடிப்படைப் பயிற்சி<br>Computer awareness | 3மாதம |
| 1. அரச ஊழியர், ஏனைய நிறுவன உத்தியோகத்தர்கள் | BATCH - I |
| 2. பாடசாலைக் கல்வி முடித்தவர்களுக்கு | BATCH - II |
| கணனி அத்திவாரப் பயிற்சி<br>Computer Fundamental Training | 3மாதம |
| 3. கல்லூரி பழைய மாணவர்கள் | BATCH - III |
| 4. ஏனைய பாடசாலை மாணவர்கள் | BATCH - IV |
| பொதுத் தகவல் தொழில்நுணுக்கம்<br>General Information Technology | 6மாதம |
| 5. க.பொ.த(உ.த) மாணவர்கள் | BATCH - V&VI |

எமது கல்லூரி மாணவர்க்கு மாலை 3.00 - 5.00 மணி
ஏனைய கல்லூரி மாணவர்களுக்கு மாலை 5.00 - 8.00 மணி

**மாலைநேர (5.00 p.m - 8.00 pm)**
**விடுமுறை நாள் வகுப்புக்கள்**

| விண்ணப்ப முடிவு | பயிற்சி ஆரம்பம் |
|---|---|
| 10.01.2003 | 15.01.2003 |

**விண்ணப்பப் படிவம், கட்டண விபரங்களுக்கும்**
நிலைய முகாமையாளர்
**மகேஸ்வரி கணனி வள நிலையம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(C/5525)

# இன்று ஒரு தகவல்

## அன்பு அனைத்திற்கும்மூலம்

'எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணியிரக்கவு நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'
(தாயுமானவர்)

கடவுளருளினால்உண்டாகுங் குணங்களில் அன்பு மிகவுஞ் சிறந்தது. அன்பு என்னுங் குணம் எல்லாப் பிராணிகளிடத்திலும் இருக்கிறது. கொடியதாகிய நாகபாம்பும் தன் குட்டியில் அன்புள்ளதாயிருக்கின்றது இந்த அன்பு மெய்யன்பு இப்படியல்லாத அன்பும் உண்டு. அது ஆணவத்தினால் உண்டாவது அது பொய்யன்பு பொய்யன்பு எப்படிப் பட்டதென்று பார்ப்போம். ஒரு திருடனானவன் கையில் பொற்காப்பு அணிந்திருந்த ஒரு சிறுவனைக் காண்கின்றான். சிறுவனுக்கு ஒரு வாழைப்பழத்தை வாங்கிக் கொடுத்து மிகுந்த அன்பாய் ஆதரவாகப் பேசி அவனைத் தன்னோடு கூட்டிக் கொண்டு போகிறான். திருடன் சிறுவனுக்கு வாழைப்பழம் வாங்கிக் கொடுத்தது அன்பு போலத் தோன்றினாலும் அன்பன்று. சிறுவனுடைய பொற்காப்பைப் பறித்தற்காகவே வாழைப்பழம் வாங்கிக் கொடுத்தான் இது ஏமாற்றுவதற்காகச் செய்த செய்கை இவன் காட்டிய அன்பு பொய்யன்பு.

ஒருவன் பஞ்சவர்ணக் கிளியை வளர்க்கிறான். அப்படி வளர்ப்பது கிளிமேல் வைத்த ஆசையினாலன்றி, அன்பினாலன்று அவனுக்கு கிளிமேல் அன்பு இருக்குமானால் அதைக் கூட்டில் அடைத்துவருத்த மாட்டான். தன்னயம் கருதாமற் செய்யும் அன்பு தான் கடவுளின் திருவருளால் உண்டாகும் பரிசுத்தமான அன்பு இந்த அன்பினாலுண்டாவதெல்லாம் நன்மையாகவேயிருக்கும். பசு தன்கன்றில் அன்பாக இருக்கின்றது. அது ஏதாவதொரு பலன்பெறவேண்டுமென்று கன்றை நேசிக்கவில்லை. தாய் பிள்ளைகளில் வைக்கும் அன்பும்இப்படிப்பட்டதே. இரந்திதேவர் நாற்பத்து எட்டு நாள் அன்னந்தண்ணீரின்றிஇருந்த பொழுது, தமக்கு வந்த போசனத்தையும், தண்ணீரையும் விரும்பிக் கேட்டவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்துடன் கொடுத்தார்.

கடவுளில் அன்புள்ளவர்கள் இப்படியான அன்புள்ளவர்களாயிருப்பார்கள். இவர்கள் எப்படிப்பட்ட அந்நியர் வருந்தும் பொழுதும் தங்களாலியன்ற உதவிசெய்வார்கள். இரந்தி தேவருக்கு அந்தப் புலையனிலும், சிபிச் சக்கரவர்த்திக்கு அந்தப்புறாவிலும் அவ்வளவு அன்பு உண்டானதற்குக் காரணம் என்ன அவர்கள் கடவுளிலே மிகுந்த அன்பு உள்ளவர்களாயிருந்தார்கள். கடவுள் ஒருவரே மெய்யான பொருள். அவரிலே உள்ள அன்பேயல்லாமல் நமக்கு வேறொரு இன்பம் இருக்கக் கூடாது. ஆனால் நமக்கு அவரில உள்ள அன்பினால், நாம் அவரை வணங்குவதல்லாமல், அவருக்கொரு உதவியுஞ் செய்ய எமால் முடியாது.

என்னுடைய அன்பன் என் வீட்டுக்கு வருகிறான், என்னுடைய பிள்ளையைக் கண்டதும், அதைத் தூக்கி மடியில் வைத்து அணைத்துமுத்தமிட்டு அன்பு பாராட்டுகிறான், எவ்விலுள்ள அன்பிலும் பார்க்க என்பிள்ளையிலே அதிக அன்புள்ளவனாயிருக்கிறான். என்பிள்ளை ஏதாவது தனக்குக் கொடுக்குமென்று அவன் அன்பாயிருக்கவில்லை. என்னில் அன்பாயிருக்கிறபடியால் என் பிள்ளையிலும் அன்பாயிருக்கிறான். ஆதலால் எமக்குக் கடவுளில் மெய்யன்பு இருந்தால், அவருடைய குழந்தைகளாகிய உயிர்களின் மீதும் மெய்யன்புஇருக்கும். நாம் கடவுளுக்காக எவ்வளவு பாடுபடுவதற்கும் சம்மதமாயிருந்தால், உயிர்களுக்காகவும் அவ்வளவு பாடுபடுவதற்குச் சம்மதமாக இருப்போம். கடவுளில் அன்பு வைப்பது எங்களுக்குப் பிரதானமான கடனாகும். ஆகையால் அவருடைய குழந்தைகளாகிய உயிர்களில் அன்பு வைப்பதும் எங்களுக்குப் பிரதானமான கடன், நாங்கள் பிற உயிர்களை நேசிக்கும் போது, அவைகள் எமக்கு என்ன நன்மை செய்கின்றன என்று பார்க்க வேண்டியதில்லை: அவைகள் எங்களுக்கு நன்மை செய்தாலும் தீமைசெய்தாலும் அவைகளை நேசிப்பது எங்களுடைய கடனாகும்.

எவர்களாயினும் நமக்குப் பொல்லாங்கு செய்தால், கடவுளுக்காக அவைகளை நாம் பொறுத்தல் வேண்டும்; அவர்கள் நல்லவர்களாயிருந்தால் அவர்களைநம்முடைய அன்பினால் வசப்படுத்த வேண்டும். அவர்கள் தீயவர்களாயிருந்தால் 'தீயாரைக் காண்பதும் தீதே' என்ற விதிப்படிபொதுவாக அவர்களினின்றும் நாம் விலகிக் கொள்ள வேண்டும். ஆயினும் அவர்களில் உள்ளன்புடையவர்களாய் அவர்களுக்குத் துன்பம் நேரிட்ட காலங்களிலே, மற்றையவர்களுக்கு நாம் உதவி செய்வது போல, அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும்.

அன்பு ஒருவனை நல்ல செய்கைகளைச்செய்யும் படிஏவும், அன்பு பாவங்களைச் செய்யவிடாமல் தடுக்கும். அன்புள்ளவன் உயிர்களை வருத்திக் கொல்ல மாட்டான். அன்புள்ளவன் பிறருடைய செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்ளமாட்டான். அன்புள்ளவன் பிறர் குற்றங்களைத் தூற்றித்திரியமாட்டான் அன்புள்ளவன் பொய்யினாலோ, களவினாலோ, வேறெந்தத் தீய செய்கையினாலோ பிறர் மனதை வருத்த மாட்டான். எந்தப் புண்ணியம் செய்வதற்கும் அன்புவேண்டும். அன்பில்லாமல் கொடுக்கப்பட்ட மிக ருசியான உணவிலும்பார்க்க, அன்புடன் கொடுக்கப்பட்ட பழைய சாதத் தண்ணீரே மேலானதாம்.

'ஆதரவே பரமான
அறமதாகும்
ஆதிநடு அந்தம்
இவற்றனைத்துமாகும்
ஆதரவற்றவர் ஈகை
அறமேயாகா
ஆதலினால் ஆதரவே
மூலமாகும்
ஆதரவே பிரகிருதி ஆன்மா
ஈசன்
எனும் பொருளும்
அறிவிக்கும், அமலன்றாளும்
ஆதரவே அடைவிக்கும்
ஆதலாலே
அனைத்தினுக்கும்
ஆதரவேமூலமாகும்.

சு. சிவபாதசுந்தரனார்

# கண்ணிவெடி ஒழிப்புக்கான கண்காணிப்பாளர் மாநாடு

## கொழும்பில் 5தினங்கள்

(கொழும்பு)

கண்ணிவெடி ஒழிப்புக்கான கண்காணிப்பாளர்களின் ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி முதல் 31ஆம்திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை இயக்கம் என்ற அமைப்பு ஒழுங்கு செய்துள்ள இம் மாநாட்டில்25 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளனர்.

இம் மாநாட்டில் பங்கு பற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் இயக்கம் கண்ணிவெடிகளை அகற்றும் முறைமைகள் குறித்து ஆய்வு செய்யவென வன்னி சென்று 3 தினங்கள் அங்கு தங்கவுள்ளனர்.

இம் மாநாட்டுத் தொடக்க விழாவில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ் மிலிந்தமொறகொட, திலக் மாரப்பன, ராஜித சேனாரத்ன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-3)

## ஒரு நாள் கோழிக்குஞ்சு

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் சமாசத்தினால் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் நடத்தப்படும் கோழிப்பண்ணையில் இன்று ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும் என சமாசத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (உ77)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சோமசுந்தரம் சபாமூர்த்தினம் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் நாவலர் மகாவித்தியாலய முன்னாள் ஆசிரியரும் வண்ணை மேற்கு அங்கு பாசு பிள்ளையார் தேவஸ்தான தலைவருமாவார். (உ

## தோட்டப் பகுதியில் அடிக்கடி தீ விபத்து

(கொழும்பு)

ஜயசம தோட்டப்பகுதியில் நேற்றுமுன் தினம் மாலை ஏற்பட்ட தீவிபத்துக் காரணமாக 14 லயன்கள் முற்றாக எரிந்து சாம்பலாகி உள்ளன.

இத் விபத்துக்கு மின்ஒழுக்கே காரணமென கண்டறியப் பட்டுள்ளது.

தோட்டப்பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்து காரணமாக உடனடியாக விசாரணைகளை நடத்திநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுவீடமைப்பு பொருளாதார தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம்தொண்டமான் மின்சாரசபைக்குபணிப்புரைவிடுத்துள்ளார்.

லிந்துல,இயருல்கல தோட்டத்தின் கடந்த வெள்ளிக்கிழமை மின் ஒழுக்கு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் 7 லயங்கள் எரிந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## 20 மாணவருக்கு புலமைப் பரிசில்

(அம்பலாங்கொட)

கதிர்காம ஆலய ஆதரவில் அப்பகுதியில் உயர் கல்வி பெறும் 20 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

கதிர்காம ஆலயத்திற்குபுத்தளை, தனமல்வில, கதிர்காமம் ஆகிய பகுதிகளிலுள்ள நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து இந்தநிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு மாணவருக்கும் 2ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படுகிறது (பி)

## கரையோரப் பகுதிக்கு அமைச்சர் மிலிந்த விஜயம்

### வீதிகளை திறப்பதற்கு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்த இடம் பெயர்ந்த மக்கள் அப்பகுதிகளில் மீளக் குடியமர்த்துவதற்கு படைத்தரப்பினர் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிப்பது அவர்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் என யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் உயர் பாதுகாப்பு வலய விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் யாழ்ப்பாணம் வந்த உயர் மட்டக் குழுவினர்யாழ் ஆயர்தோமஸ் சவுந்தர நாயகத்தை அவரது இல்லத்தில்சந்தித்தபோது ஆயர்இதனை வலியுறுத்திக் கூறினார்.

இதுபற்றி அவர் தொடர்ந்து பேசுகையில்; உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதுதொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு அதற்கு ஏற்றவகையில் இராணுவம் செயற்பட வேண்டும் என்றார்.

இதற்குப்பதிலளித்து பேசிய அமைச்சர் மிலிந்த மொறகொட, உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக சாதகமான முடிவுகளை எடுப்பதற்கே தற்போது முயச்சி செய்து வருகிறோம் என்றார்.

இதேவேளை, யாழ் ஆயருடனான சந்திப்பை முடித்துக் கொண்ட அமைச்சர் மிலிந்த தலைமையிலானஉயர் மட்டக் குழுவினர்மற்றும் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோர் குருநகர் பகுதியில் படையினர் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை நேரில் சென்றுபார்வையிட்டனர் அத்துடன் குருநகர் பகுதியில் பொதுமக்களின் பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ள ஐந்து வீதிகளைதிறந்து விடுவதற்கும் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

(த-77,43,7)

## இளைஞர் படைத் தலைவர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கொள்கை அபிவிருத்தி செயற்படுத்துகை அமைச்சின் வழி நடத்துகையில் இடம் பெறும் இளைஞர் படைத் தலைவர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பப் படிவங்கள் தேசிய ரீதியாக நாடெங்கும் தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அனுசரணையுடன் ஒவ்வொரு பிரதேச செயலக அலுவலகங்களிலும் மேற்படி பதவிக்கான விண்ணப்ப படிவங்களைஇளைஞர்,யுவதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

க.பொ.த (உ/த)த்தில் 3 பாடங்களில் சித்தியடைந்த 18-28 வயதிற்குட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

பாடசாலை மாணவ தலைவர்கள்,சமூகத்தை மையமாகக் கொண்ட ஸ்தாபனங்களின் தலைவர்கள், சமூக சேவையாளர்கள் மற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு இப்பதவிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலதிக விபரங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும். இதற்கான விண்ணப்ப முடிவுத்தினம் இம் மாதம் 21 ஆம்திகதியாகும். (உ)

## மயக்கத்தில் கிடந்த ஜெர்மன் பெண்ணுக்கு அபராதம்

(களுத்துறை)

ஹெரோயின் போதைப் பொருளை அருந்திவிட்டுமயக்கத்தில்கிடந்தஜெர்மன் பெண்மணிக்கு களுத்துறை பதில்நீதவான் 7ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்தார்.

அளுத்கம நகரில் இப்பெண்மணி மயங்கிக்கிடக்கக்காணப் பட்டார் என பொலிஸார்கூறினர்.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான இப்பெண்மணி கடந்த போய தினத்தன்று இரவு 8 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டார் என்றும்இவரிடமிருந்து 200 மில்லியன் கிராம் ஹிரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெண் வெளிநாட்டு நிறுவனமொன்றின் உயர்அதிகாரி என்றும் விடுமுறையின் உல்லாசமாகப் பொழுது போக்க வந்தவர் என்றும் பொலிஸ் மேல் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (பி)

## தட்டாதெரு சந்தியில் மிதிவெடி அகற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் கட்டாதெருச் சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் மிதிவெடி அகற்றும் பணி இடம்பெற்றமையை அவதானிக்கமுடிந்தது.

அப்பகுதியில் சிறுபற்றைக் காடாகக் காட்சியளிக்கும் தனியாரின் காணிகளில்படையினரின் மிதிவெடி அகற்றும் விசேட பிரிவினர் இதில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பகுதியில் முன்னர் படையினரின் மினிமுகாம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-16)

# நோர்வே பிரதமருக்கு ஜனாதிபதி எழுதிய கடிதம் அமைதிப் பேச்சைப் பாதிக்காது

## ஜனாதிபதியின் பேச்சாளர் பி.பி. ஸிக்கு பேட்டி

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று வருகின்ற அமைதிப் பேச்சு வார்த்தையை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா எழுதிய கடிதம் எந்த விதத்திலும் பாதிக்காது.

இவ்வாறு ஜனாதிபதியின் அலுவலகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா நோர்வேப் பிரதமரிற்கு, தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு வானொலி உபாரணங்களை இறக்குமதி செய்த விவகாரத்தில் நோர்வே சம்பந்தப்பட்டிருப்பது தொடர்பில் எழுதிய கடிதம் தொடர்பாக பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிடுகையில்,

இந்த விவகாரத்தில் நோர்வே தூதரகத்தினர் தமக்குத் தேவையில்லாத, தமக்கல்லாத ஒருபொருளை எடுத்து விடுதலைப்புலிகளிடம் கொடுத்தமை சர்வதேச உடன் பாட்டைமீறிய செயலகும்.

1976 ஆம் ஆண்டு செய்யப்பட்ட சர்வதேச உடன் படிக்கையின்படி நோர்வே அரசாங்கம் இதனைச் செய்யலாம் என்ற படியால்தான் இந்த வானொலி உபாரணங்களை இலங்கை அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுத்தார்களா என் ஜனாதிபதியின் இக்கடிதத்திற்கு பதிலளிக்கும் முறையில் தெரிவிக்கலாம்.

ஆனால், தற்போது விடுதலைப் புலிகளுக்கு அன்பளிப்பாக கொடுத்தமை பற்றி அவர்கள் விளக்க வேண்டும்;

எனவே, இந்தவிடயம்பேச்சு வார்த்தையினை, குழப்பவோ பாதிக்கவோ மாட்டாது ஆனால், பேச்சு வார்த்தையின் போது இது பற்றி பேசப்படலாம் அவ்வாறு பேசப்பட்டால் நல்ல தென்றே கூற வேண்டும் என்றார்; (உ-10)

# பனை மரம் தறிப்பு

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாமிற்கு அண்மித்த நீலங்காடு, பாலக்காடு கிராமங்களில் கடற்படையினர் பனை மரங்களைத் தறித்து வருகிறார்கள் ராம்.

இப்பகுதியில் மீளக்குடியமர்ந்து வரும் காணி உரிமையாளர்கள் இதனைத் தடுக்க முயன்ற போதும் அது பலனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-246)

# மூதூர் மீனவர் மரணம் தொடர்பில் ஹக்கீம் கடற்படையுடன் பேச்சு

(திருகோணமலை)

விமானப் படையின் விசேட ஹெலி கொப்டர் மூலம் நேற்று முன்தினம் திருகோணமலை சென்றுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்,

அங்கு மூதூர் கொட்டியாரக் குடா கடற் பகுதியில கடற் படை படகுடன் மோதுண்டு இறந்த மீனவர் தொடர்பாக திருகோணமலை கடற்படைத் தளத்தில் பிரதேசபதி கடற்படைத்தளபதி பி.டபிள்யூ ஏ.எல். திஸ்ஸநாயக்காவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்;

இப் பேச்சு வார்த்தைகளின் போது மூதூர் மீனவர்கள் கடந்த பல வருடங்களாக அச்சுறுத்தல்களுக்கும் உயிர் அபாயங்களுக்கும் உள்ளாகி வருவது குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இச்சம்பவம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்தி உண்மை நிலையை மக்களுக்கு தெரியப்படுத்துமாறும் கடற்படை அதிகாரிகளை அமைச்சர் ஹக்கீம் கேட்டுக் கொண்டார். (உ-8)

# வலது குறைந்தோருக்கு வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

வலது குறைந்தவர்களுக்கான வீடமைப்புத் திட்டமொன்றை சமூகநலன்புரி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

வலது குறைந்த அனைவரும் இத்திட்டத்தின் கீழ் உதவி பெற்றுக் கொள்ள முடியும்;

ஆகக் குறைந்தது அரைப் பரப்புக் காணியைக் கொண்டுள்ள வலது குறைந்த ஒருவருக்கு இத்திட்டத்தின் கீழ் அரசு 50 ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

இத்தொகையினை அவர் திருப்பிச் செலுத்தத் தேவை இல்லை

இது தொடர்பான விபரங்களை வலது குறைந்தோர்தத் தமது பகுதிகளில் உள்ள பிரதேசசெயலகங்கள் அல்லது சமூ சேவை உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளமுடியும். உ-8)

# மீளக்குடியமர்வை மறுப்பது அடிப்படைஉரிமை மீறல்

## விநாயகமூர்த்தி எம். பி. பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஒரு நபர் தமது சொந்த காணியில் தனது சொந்த வீட்டில் போய் மீளக் குடியேறும் உரிமையை மறுப்பதானது; அவனது அடிப்படை உரிமையை மறுக்கும் செயலாகும் என்று சுட்டிக்காட்டி யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவுக்கு கடிதம் எழுதியுள்ளார்;

வலிகாமம் வடக்கிலும் தென்மராட்சியிலும் மீளக் குடியமர வேண்டியிருக்கும் சுமார் 2 லட்சம் மக்களின் நிலைமை குறித்து பிரதமரின் கவனத்துக்கு கொண்டு வரும் விதத்தில் எழுதப்பட்டுள்ள இக் கடிதத்தில் ஏற்கனவே வரவு செலவுத் திட்டவுரையில் தாம் இதைக்குறிப்பிட்டுள்ளது பற்றியும் விநாயகமூர்த்தி பிரதமருக்கு நினைவூட்டியுள்ளார்.

வட பகுதியில் அகதிகளைக் குடியமர்த்தும் விடயத்தில் யாழ்ப்பாணம் ராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் நிலைப்பாடுவடபகுதியைப்பொறுத்த வரை அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக நான் நினைக்கவில்லை;

அகதிகளை மீளவும் உயர் பாதுகாப்புவலயம் ஈறாக குடியமர்வதற்கு அனுமதிக்கும்

(2-ம் பக்கம் பார்க்க)

# சிறுகைத் தொழிலாளர் வருமான அதிகரிப்புத் திட்டக் கருத்தரங்கு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 3 ஆம் திகதி மு.ப. 10.00மணிக்குயாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் சிறு தொழில்களுக்கான கடன் வழங்கல், மற்றும் வருமான அதிகரிப்புத் திட்டம் பற்றிய கருத்தரங்கு நடைபெறவுள்ளது

இக்கருத்தரங்கிற்குகிராமிய வங்கிகளை நடத்தும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களைத் தவறாது பங்குகொள்ளும் படி சமாச முகாமையாளர் எஸ் சிவபாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கொள்கை திட்டமிடல் அபிவிருத்தி அமுலாக்கல் திணைக்களத்தின் கீழ் இயங்கும்தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் வெளிக்கள உத்தியோகத்தரான ஜோன்மெல் ராஜன் இதில் பங்கு கொண்டு கருத்துரை வழங்குவார்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ- 77)

# சாரதிகளைக் கொன்று வாகனம்திருடும் கும்பல் தலைவன் பிடிபட்டான்

(காலி)

வாகனச்சாரதிகளைக் கொன்றுவிட்டு வாகனங்களைக் கடத்திச்செல்லும் கும்பல்ஒன்றின் தலைவனை காலிபொலிஸார் கைதுசெய்துள்ளனர்;

பொலிஸ் விசாரணைகளின்படி, இந்தக்கும்பலினால் ஏற்கனவே மூன்று சாரதிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் கடுமையாக காயமுற்றுள்ளார் இவர்களின் வாகனங்களும் கடத்தப்பட்டுள்ளன;

கடந்த ஓகஸ்ட்மாதம் கட்டுகொட என்றஇடத்தில் ஒரு வாகனம் கடத்தப்பட்டதையடுத்து நடந்த புலன்விசாரணைகளின்பின்னர், இந்தக் கும்பல்பற்றிய விபரம் பொலிசாருக்குத் தெரியவந்துள்ளது;

இன்னொரு சம்பவத்தில் பொல்காவலையில் ஒரு வாகனம் கடத்தப்பட்டதுடன் அதன்சாரதி கொல்லப்பட்டிருந்தார்; ஜூலைமாதத்தில் அம்பலாந்தோட்டையில் வாகனம் கடத்தப்பட்டு சாரதி கொலைசெய்யப்பட்டுள்ளார்

அதற்குமுன் அதேமாதம் எம்பலப்பிட்டியாவில் இவ்வாறான ஒருசம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவைதவிர காலியில் ஒரு வீட்டுக்குள் பொலிசார் போல் உடைதரித்து புகுந்து வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்று மக்கள் வங்கியில் அடகுவைத்திருந்தமை தெரிய வந்துள்ளது. (பி)

# முன்பள்ளிச் சிறார்களின் தராதரம் உயர வேண்டும்

## மாவை எம். பி. கருத்து

(தென்மராட்சி)

இப்போது ஏற்பட்டு வருகின்ற பூகோள மயமாக்கலின் சவால்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் எமது பிரதேசத்தில் வாழ்கின்ற முன்பள்ளி சிறுவர்களின் எதிர்காலம் அமைய நாம் இப்போதே அத்திபாரம் இட வேண்டும்.

தமிழர் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா சமரபாகு அறவழி மழலைகள் கல்விப்பூங்காவின் 18 வதுஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு உரை நிகழ்த்தும் போது இவ்வாறு தெரிவித்தார்.

சமரபாகு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் அபிவிருத்தித் தலைவர் எஸ். இன்பரூபன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பூங்காவின் முன் பள்ளிக் கல்வியைப் பூர்த்தி செய்து ஆரம்பப் பாடசாலைக்குச் செல்லவுள்ள மழலைகள் கௌரவிக்கப்பட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது,

மேலை நாடுகளில் முன்பள்ளிகளில் பயில்கின்ற பிள்ளைகள் தகவல் தொழில்நுட்பத்துறை சார்ந்த அறிவுகளை பெறுகின்ற வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

ஆனால் எமது பிரதேசத்திலுள்ள முன்பள்ளிகளில் அத்தகைய வசதிகளும், வாய்ப்புகளும் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை இந்த நிலையில் புதிய மாற்றங்கள் அவசியம் ஏற்படுத்தப்பட்டு, முன்பள்ளிகளின் தராதரங்கள் உயர்த்தப்படல் வேண்டும்;

அறவழி மழலைகள் கல்விப் பூங்காக்களில் பயில்கின்ற சிறுவர்கள் மத்தியில் திறமைகள் வளர்க்கப்பட்டு, மேடைக் கூச்சங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளமையை நேரில் காண்கின்ற போது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளன.

இந்த வகையில், யாழ். குடாநாட்டில் முன்பள்ளிக் கல்விப் பணியில் நல்ல சேவை செய்து வருகின்ற அறவழிப் போராட்டக் குழுவை பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றேன் எனக் குறிப்பிட்டார். (உ-77)

# உயர் பாதுகாப்பு வலய நீக்கம் நடைமுறைக்கு ஒவ்வாத விடயம்

## ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

(நமது நிருபர்)

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது உயர் பாதுகாப்பு வலயம் போன்ற பல பிரச்சினைகள் உருவாகலாம். ஆனால் எத்தகைய பிரச்சினைகள் வந்தாலும், அவற்றை பேச்சு வார்த்தை மூலம் பேசித் தீர்த்துக் கொள்வதில் அரசும் விடுதலைப் புலிகளும் உறுதியாக உள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ நேற்று முன்தினம் யாழ். விஜயத்தின் பின் அளித்தபேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்;

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கடந்தமாதம் 14 ஆம் திகதி முகமாலையில் விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடிய போது, அதி உயர் பாதுகாப்பு வலயம் மீள்குடியேற்றம் தொடர்பாக யாழ். குடா தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா திட்டம் ஒன்றை தயாரித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடமும், விடுதலைப் புலிகளிடமும் கையளிப்பதாக முடிவு எடுக்கப்பட்டதன் பிரகாரம் இது தொடர்பாக அடுத்த கூட்டம் ஒன்றில் முடிவு எடுக்கப்படவுள்ளது;

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இப்போது எழுந்துள்ள சிக்கல்நிலைக்குப் பேச்சுவார்த்தை மூலமேதீர்வு காணப்படவேண்டும்;

இராணுவபலம் யார் பக்கம் இருக்கிறது என்பதைப் பொறுத்தவிடயமாக இருந்தாலும், இப்பிரச்சினையை நாம் பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்க்கலாம் என்றே நம்புகிறோம்.

உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படுவதானது நடைமுறைக்கு ஒவ்வாத விடயமாக இருக்குமெனக் கூறப்பட்டாலும் இத்தகைய விடயங்கள் பேச்சுவார்த்தையின் போது பேசித் தீர்க்கப்படலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

எனை மாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்

குறள்

# வலம்புரி

## மீனவரின் கஷ்ரம்!

**யாழ்** குடாநாட்டில் நடந்த இனயுத்தத்தால் மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு கொஞ்சமல்ல கடலுக்குச்சென்ற மீனவர்கள் சடலங்களாகத் திரும்பியசம்பவங்கள் பல தடவைகள் இடம்பெற்றுள்ளது. மீனவர்களைத் தேடித்தேடிக் கடற்படையினர் சுட்டுத் தள்ளியதும். கைது செய்து கொண்டு சென்றதும் மறக்கமுடியாத சம்பவங்கள், அத்தகைய பாதிப்புக்களையும் தாங்கிக் கொண்டு தமதுஜீவனோபாயத்திற்காகக் கடலுக்குச் சென்று தொழில் புரிந்த மீனவர்களுக்கு அரசு ஒருபெரும் விருதைக் கொடுத்தது. அது தான் கடல்வலயத் தடைச்சட்டம் அச்சட்டத்தினால் மீனவர்கள் கடலுக்கே இறங்கமுடியாமல்போயிற்று இதனால் மீனவக் குடும்பங்கள் பெரும் கஷ்ரத்தைஎதிர் நோக்கின.

உலக நாடுகளெல்லாம் கடல்வளத்தை நல்ல முறையில் பயன்படுத்துவது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும் போது இலங்கைஅரசுவடபுலத்து மீனவர்களைக் கடலுக்குச்செல்ல வேண்டாமெனத் தடை செய்ததெனில், அரசின் இனவாத எழுகை எப்படியிருந்ததென்பதை உணர முடியும்.

அரசின் கடல்வலயத் தடைச் சட்டத்தினால், குடாநாட்டு மீனவர்களின் வருமானம் பூச்சியத்தைத் தொட்டது, கடல்வளம் எந்தப்பயன்பாடுமின்றி வெறுமனே விடப்பட்டது. இத்தகையதோர் சூழ்நிலையில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல்எல்லைக்குள் நுழைந்து கடல் வளங்களை அள்ளிச் சென்றனர்.

தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானசூழ்நிலை ஏற்பட்டதை அடுத்து கடல்வலயச் சட்டங்கள் தளர்த்தப்பட்டு மீனவர்கள்கடலில் இறங்கித் தொழிலில் ஈடுபடக் கூடியதாகவுள்ள போதிலும் இந்தியமீனவர்களின் தொல்லை தாங்கமுடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக்கடல் எல்லைக்குள் பிரவேசிப்பதால் வடபுலத்து கடற்றொழிலாளர்கள் பெரும்பாதிப் படைந்துள்ளனர்.

# கன்னல் மொழிதமிழை இன்னல்இன்றிக் கற்பித்த உன்னதமான ஆசான் பொன்னையா கமலரூபன்

கன்னல் மொழி தமிழை யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் இனிதே கற்பித்த சரவைவமைந்தன் பொன்னையா கமலரூபன் மின்னல் போல் மறைந்து ஆண்டுகள் இரண்டு உருண்டோடி விட்டன சாந்தமானமுகம் ..காந்தம்போன்று கவர்ந்திழுக்கும் விழிகள்... பொன்னகை தன்னை மிஞ்சிடும் புன்னகை தன்னை உதிர்த்திடும் உதடுகள்... அன்னநடையை நிகர்த்திடும் நடை...கோபத்தையே உணராத கள்ளம் இல்லாஉள்ளம், தமிழ்த்தீபம் அவர் தான் கமலரூபன்.

### தமிழுக்காய் வாழ்ந்தவர்

மெல்லத் தமிழினிச்சாகும் என்று யார் சொல்லினாலும் பொங்கிஎழுந்து மிடுக்காய்... அடுக்கடுக்காய் ... பதிலுரைத்து உறையவைத்த இளம் சிங்கம் அடங்கிவிட்டது. ஆனால் ஆசிரியப்பணியினில் அவர்கொண்ட எண்ணங்களுக்கு வண்ணம்கொடுக்க அவர்வழியினில் ஆயிரம் ஆயிரம் மாணவர்கள்...விழிகளில் ஒளியேந்தி அவர் வழியினிலே செல்கின்றார்கள்.

தமிழ்மொழியை தன்னிரு விழியெனவே கொண்டு வாழ் நாள்முழுதுமே தமிழுக்காய் வாழ்ந்தார். தமிழ்மொழியில் கடினம்என எதுவும் இல்லையென்று இலகுமுறையினிலே தமிழை உலவவிட்ட கமலரூபன் இன்று எம்மிடையே இல்லை. அந்தக் கமலரூபன் உதிர்ந்துபோனாலும்... அவரின் நினைவுகளும் அவரின் புன்னகையும்... கற்பித்தல்களும்... அவரின் மாணவ மணிகளில்இருந்து இன்னும் உதிராமலேயே உள்ளன.

### கவிதை இலக்கியக்காதல்

கவிதை இலக்கியத்தில் ஆராக் காதல்கொண்ட கமலரூபன் என்னும் புதுக்கவிதை முற்றுப்பெறாமலே முடிந்துபோனதுதான் துயரத்தின் உயரத்தில் எம்மை நிற்கவைக்கிறது. தமது கலைமாணித் தேர்வுக்காக 'எண்பதுகளிற் குப்பின் ஈழத்துப் புதுக்கவிதையின் வளர்ச்சி' என்றஆய்வுக்கட்டுரையைச்சமர்ப்பித்து எல்லோரையும் வியக்கவைத்தார்-பற்பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருந்தார். ஆனால் காலனவன் அவரை ஆய்வுசெய்யாமல் கவர்ந்தது தான் கொடுமையிலும் கொடுமை.

## மறைந்தார் மாண்பு

கவர்ந்து விட்டான்.

30 12 2000 அன்று ஆசானின் பிறந்த நாள் என்று விழிமேல் விழிவைத்துக்காத்திருந்தோம் ஆனால் 31 12. 2000 ஆசானின் இறந்த நாளாய் மாறுமென்று யார்தான் நினைத்தார்கள்?

கமலரூபனின் பிரிவாலே ஆயிரம் ஆயிரம் மாணவர்கள் ... நண்பர்கள் உறவினர்கள்... மனைவி என எல்லோருமே இன்றும் கூட கண்ணீர்க் கடலிலே மிதந்த படியேதான்.

வகுப்பறைக்குள் அவர் நுழைகையிலே தமிழ் மணம் கமழ்ந்து நிற்கும் கழுதைக்குத் தெரியுமாகற்பூரவாசனை என்பது போலத்தான் கமலரூபன் ஆசானின் தமிழ் மனத்தின் அருமையும் பெருமையும் தெரியாமல் காலனவன்

### எட்டுமாத இல்வாழ்வு

இல்லறம் என்னும் நல்லறம் புகுந்து எட்டு மாதத்தைத் தொட்டு விட முன்னே விட்டுப் பிரிந்ததைத்தான் எம்மால் ஜீரணிக்க முடியவில்லை. பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளனாய்... நல் ஆசானாய்... நல்ல நண்பனாய்... உறவினனாய்... கணவனாய்.. பலருக்குப் பரிணாமங்களில் தோற்றம் அளித்த கமலரூபன் இன்று அமரன் என்னும் ஒரேயொரு நாமத்திலேஉலவுகின்றார்.

அடிக்கடி வகுப்பிலே கமலரூபன் ஆசிரியர் உதிர்க்கின்ற திருக்குறள் என் செவிப்பறைகளிலே இப்பொழுதும் ஒலித்தபடியேயுள்ளது

'ஒருமைக் கண்தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமைக்கும் ஏமாப் புடைத்து' அதுவே அந்தத் திருக்குறள்.

அதற்கமையக் கமலரூபன் ஆசான் இனியெடுக்கும் பிறப்பெல்லாம் தமிழ் மொழியை வளர்ப்பதற்காகவே நிச்சயமாய்ப் பிறப்பார்.

**தர்மராஜா அஜந்தகுமார்**
வதிரி

# பாதுகாப்பு வலய விவகாரத்தால் சமாதான முயற்சிக்கு பாதகமில்லை

## உள்துறை அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

அதி உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய முரண்பாடுகள், தற்போது நாட்டில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என எதிர்க்கட்சியினர் சிலர் எதிர்வு கூறுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அதிஉயர் வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் சமாதான முயற்சிகளை எவ்வகையிலும் பாதிக்காது என தெரிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இவ்வாறு கிரியத் கொடநகரில் புதிதாக அமைக்கப்படவுள்ள பொலிஸ் நிலையமொன்றுக்கு அடிக்கல் நாட்டிவைத்து உரையாற்றும்போது உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

றொய்ட்டர் தாபனத்தின் மூலம் மேற் கொள்ளப்பட்ட ஆய்வின்படி தெற்காசியாவில் குண்டுகள் வெடிக்காது. தற்போது உச்ச பாதுகாப்புள்ள 10 நாடுகளில் இலங்கையும் ஒன்று என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு கிடைத்த வெற்றியெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## சாயி அருளமுதம்



இன்னொருவர் மூலம்நான் ஒருபோதும் பேசுவதில்லை நான் இன்னொருவரை வசப்படுத்துவதோ அல்லது நான் சொல்பவற்றை எடுத்துச் செல்லும் வாகனமாக உபயோகிப்பதோ கிடையாது உங்களுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும்வழங்க நான் 'நான்' ஆகவே, நேருக்கு நேர் உங்களிடம வருகிறேன். வாடும் இயல்புடைய மலர்களையோ அழுகும் தன்மை கொண்டகனிகளையோ அல்லது தேசிய எல்லைகளுக்கப்பால்எதுவிதபெறுமதியுமற்ற நாணயங்களையோ நான் உங்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதில்லை. உங்கள் உள்ளறிவு என்னும் பொய்கையின் தெட்டத் தெளிந்த நன்னீராகியமானஸ சரோவரில் மலரும் தாமரை மலரை எனக்குத் தாருங்கள். புனிதத்தன்மையாலும் நிலையான கட்டுப்பாட்டினாலும் விளையும் கனிகளை எனக்குத் தாருங்கள். பெரியோர்களைக் காணச் செல்லும்போது, கையில் பூவோ, பழமோ எடுத்து செல்ல வேண்டுமென்பது போன்ற உலகாயத நடைமுறைகளுக்கு நான் அப்பாற்பட்டுள்ளேன். ஆத்மீக உலகமே எனது உலகமாகும், அங்கே பெறுமதிகள் வித்தியாசமானவை. இறை நம்பிக்கையும் பாவத்துக்கு அச்சமும் கொண்டு மகிழ்ச்சியுடன் நீங்கள் இருந்தால் அதுவே, எனக்குப்போதுமான சேவை போதுமான கைங்கரியம், ஆகும். அதுவே, என்னை மகிழ்விக்கும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# கடந்த ஆண்டில் மட்டு மாவட்டத்தில் 47 பேர் காணாமல் போயினர்

(மட்டக்களப்பு)

பிரதமா ரணில் விக்கிரமசிங்காவினாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் 47 பேர் காணாமல் போயுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டுப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்விதம் காணாமல் போனவர்களில் 4 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தவிர, 18 வயதுக்கு மேற்பட்ட 16பேர்காணாமல் போயுள்ளதாகவும், 18 வயதுக்கு குறைந்த 22 பேர் காணாமல போயுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இராணுவத்தினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த 9 பேரும் காணாமல் போனவர்களில் அடங்குகின்றனர். (உ-8)

# குருகுலக் கல்வி நிலையம் 20 ஆம் திகதி திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையில் குருநாதர் சுவாமி ஆலயம் அருகே சுமார் 35 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இந்துகுருமார் குருகுலக் கல்வி நிலையம் இம் மாதம் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்குருகுலத்தில்சிவாச்சாரியார்களுக்கு வேதம், ஆகமம் சோதிடம், சித்தாந்தம், புராணம் என்பன போதிக்க இந்தியாவில் இருந்து ஒரு குருவான வரையும் அழைப்பித்து குருகுலத்தின் பொறுப்புக்களை அவரிடம் ஒப்படைக்கவும்நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (உ-9)

யாழ். பல்கலைக்கழக அனுமதி

# 2001,2002 மாணவர்கள் ஒன்றாக இணைக்கப்படுவர்

## துணைவேந்தர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2002ம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரட்சைக்குத் தோற்றி யாழ். பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியல் கிடைக்கப்பெற்றதும் எதிர்வரும் 6ம் திகதிக்கு முன்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படுமென யாழ். பல் கலைக்கழகத் துணை வேந்தர். பேராசிரியர் பொ.பால சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் 2001, 2002 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவான இரண்டு பிரிவு மானவர்களையும் இணைத்து விரிவுரைகள் ஆரப்பிக்கப்படவுள்ளதாகவும், எதிர்வரும் 20ம் திகதி இரண்டு பிரிவுகளையும் சேர்ந்த மாணவர் களுக்கான விரிவுரைகளை ஆரம்பிக்க முடிவு செய்துள்ள தாகவும தெரிவித்துள்ளார்.(ந-7)

# கிருசாந்தி கொலைக் குற்றவாளிகள் மேல்நீதிமன்றில் மனுதாக்கல்

(கொழும்பு)

பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த குற்றவாளிகள் நேற்று உயர் நீதிமன்றத்தில் மேன் முறையீடு செய்துள்ளனர்.

1996ம் ஆண்டு செப்ரெம்பர் 7ம் திகதி செம்மணி சோதனைச் சாவடியில் வைத்து மாணவி கிருசாந்தி குமாரசாமி, அவரது தாய், சகோதரர் மற்றும் அயலவர் ஆகியோரை கொலை செய்த தாகக் குற்றஞ்சாட்டி ஐந்து இராணுவத்தினர் கைது செய்யப் பட்டனர். அவர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை பரிசீலிப்பதற்காக மேல் நீதிமன்றம் உயர் நீதி மன்றத்திடம் கையளித்தது,

இந்த மேல் முறையீட்டை விசாரிப்பதற்காக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஐந்து நீதிபதிகள கொண்ட குழுவொன்றை நியமிக் கவுள்ளார். (5)

## சட்டமாணி வகுப்பு ஆரம்பம்

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் 4ந் திகதி சட்டமாணிக் கற்கைநெறி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி கற்கை நெறிகளுக்கு பதிவு செய்த மாணவர்களை அன்றைய தினம் சமுகம் கொடுக்குமாறு யாழ்.பிராந்திய இயக்குநர் எந்திரி. ச.ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார். (ந-54)

### அரியாலை...

குடியமர்த்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதுபற்றி விடுதலைப்புலிகளுக்கு அறிவிக் கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் ஏற்கனவே குடியிருந்த மக்களின் சரியான விபரங்கள் கிடைக்கப் பெறாமையினால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அதியுயர் பாதுகாப்பு வலயங் களில் வசித்துவந்த மக்களின் சரியான எண்ணிக்கை தொடர்பாக முரண்பட்ட தகவல்களை பல தரப்பினரும் வெளியிட்டு வருகிறார்கள்.

இந்நிலையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இராணுவத்தினரை முற்றாக வெளியேற வேண்டும என்று விடுதலைப்புலிகள் எதுவிதமான யோசனைகளையும முன்வைக்கவில்லை. பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை குடியமர்த்த வேண்டுமென்றே விடுதலைப்புலிகள் கோரி வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் இக் கோரிக்கையை இராணுவ-மனிதாபிமான-அரசியல் கோணங்களில் வைத்து ஆராயப படவேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின பெர்னாணடோ தெரிவித்துள்ளார்.(ம)

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றன.

நடந்துமுடிந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தப்படும் பாடசாலைகள் இம்மாதம் 6ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இன்று ஆரம்பமாகும் பாடசாலைகளின் முதலாம் தவணை ஏப்பிரல் மாதம் 10ம் திகதியும், முஸ்லிம் பாடசாலைகளின் முதலாம் தவணை ஏப்பிரல் மாதம் 11ம் திகதியும் முடிவடையவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# கிணற்றில் வீழ்ந்து சிறுவன் மரணம்

(தும்பளை)

கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுவன் ஒருவன் கப்பி அறுந் ததினால் அக்கிணற்றில் தவறி வீழ்ந்து பரிதாபமாக மரணமானான்.

நெல்லண்டை வீதி, தும்பளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சோமாஸ் கந்தராஜக்குருக்கள் - சிற்பவன் (வயது 6) என்பவரே மரணமானவராவார்.

இம் மரணம் சம்பந்தமான விசாரணை நேற்றுக் காலை, மந்திகை மருத்துவமனையில் நடைபெற்ற போது வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி இ.கிருபாகரசூரியன், நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் உண்டான மரணம் எனத் தீர்ப்பளித்து சடலத்தை அடக்கம் செய்யுமாறு உத்தரவிட்டார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய சார்ஜன்ட் எம்.ஐயரட்ண, சாட்சிகளை நெறிப்படுத்தினார். (ந-14,245)

### தொண்டமனாறு...

கரைதிரும்பவில்லை.

இதனையடுத்து இவர்களைத் தேடும்பணியில் ஈடுபட்டுள்ள அப்பகுதி மீனவர்கள் இவர்கள் சென்ற படகு முற்றாகச் சேதமடைந்த நிலையில் தொண்டமனாறு கடற்கரையில் கரையொதுங்கி நின்றதை கண்டுபிடித்தனர்.

இதனையடுத்து பொலிகண்டி இராணுவத்தினரிடம் தொடர்பு கொண்ட போது சோதிலிங்கம், காண்டீபன் ஆகிய இரு மீனவர் களும் பலாலி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதாகவும் மற்றை யவரின் நிலைபற்றி தமக்குத் தெரியாதெனவும் கூறியுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று காங்கேசன்துறைக் கடற்பரப்பிலிருந்து அதிவேக டோறாப் படகொன்று ரோந்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன் தினம் பொலிகண்டி குடியேற்றத் திட்டத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மேலும இருவரையும் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழு என்பவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிகண்டி குடியேற்றத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான காசிநாதர் சந்திரமூர்த்தி (வயது 36), ஐந்து பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் ஜெயக்குமார் (வயது 34) ஆகிய இருவரையுமே காணவில்லையெனத் தெரிவிக்கப் படுகிறது. (ந-5,41,43,52)

### புலிகளின்...

ஆணைக்குழு, விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இந்த மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள சுங்கச் சட்டத்தை மீறி நோர்வேயின் தூதுவரூடாக நவீன வானொலிக் கருவிகளைக் கொள்வனவு செய்ததாகவும் இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

### இராணுவ...

தளபதி கேணல் தீபனும் கலந்து கொள்ளவுள்ளனர். இதேவேளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை தயாரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இணக்கம் காணப்படாத விடயங்கள பற்றி எதிர்வரும் 14ம் திகதி நடைபெறவுள்ள கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

இந்தக் குழு தனது இரண்டாவது கட்ட விசாரணைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும், இந்தக் குழுவிற்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ( )

### கப்பலில் இருந்து...

கப்பல்களை சோதனை செய்வதற்காக இந்தியக் கடற்படையினரின உதவிகள் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)




யாழ் பண்ணைப் பகுதியில் புனரமைக்கப்பட்ட சந்தை நேற்றைய தினம திறந்து வைக்கப்பட்ட காட்சி. யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், மாநகர முதல்வர் கந்தையன் பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதையும் படங்களில் காணலாம். படம்: ஜெயகாந்தன்.

### சமாதான...

பெரிதுபடுத்தி சர்ச்சையைக் கிளப்பி சமாதானச் சூழலை பாதிப்படையச் செய்து வருவது வேதனைக்குரிய விடயம்.

ஒலிபரப்புச் சாதன வருகையானது அமைதிச் சூழ்நிலை, சமாதா னத்திற்கு முக்கிய விடயமாகும். சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக மக்களுக்கு நாம் தெரியப்படுத்துவது அவசிய மாகும். அதற்கு இச் சாதனங்கள் அவசியம் தேவைப்படுகிறது.

இவ் விடயத்தில் நோர்வே அரசையும், தூதுவரையும் சம்மந்தப்படுத்தி விடயத்தை ஜனாதிபதி பெரிதுபடுத்தி வருகின்றார். இது எமக்கு வேதனையைத் தருவதாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் 'உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை பற்றிக் குறிப்பிட்ட தமிழ்ச் செல்வன், தமிழர் தாயகத்தில் இராணுவத்தினரின் நெருக்கடி நிலையைத் தணித்து இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவேண்டும். உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதால் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாதுள்ளது.

இதனால் அவர்கள் தொடர்ந்தும் இடம் பெயர்ந்தவர்களாகவே வாழ்கின்றனர்.

சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றும், இது தொடர்பாகவே அடுத்தகட்டப் பேச்சில் ஆராயப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## விளையாட்டுச் செய்தி

நெல்பேன் கிறிக்கெற்

# இலங்கை அணியிடம் அவுஸ்ரேலியா தோல்வி

(நெல்பேன்)

இலங்கை அணிக்கும் அவுஸ்ரேலிய ''ஏ'' அணிக்கும் நெல்பேனில் நடைபெற்ற ஒரு நாள் கிறிக்கெற் போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய ''ஏ'' அணி 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணியின் சார்பில் மாவன் அத்தபத்து ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், ரசல் ஆனல்ட் 47 ஓட்டங்களையும்

அவுஸ்ரேலிய அணியின் சார்பில் ஆர் செம்பல் 61 ஓட்டங்களையும் பெற்றனர். (ந-5)

**ஆன்மார்த்த ஆஞ்சலி**

அகில இலங்கை இளங்கோ கழகத்தின் பிரதம ஆலோசகரான

**சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்களின்**

அன்பு மைந்தன்

**செல்வன் சோ. சிற்பவன்**

அவர்கள் 31.12.2002 அன்று அகால மரணம் அடைந்ததையிட்டு அவர்களின் குடும்பத்தினர் துயரில் நாமும் பங்கு கொண்டு அவருக்கு எழுது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

*அகில இலங்கை இளங்கோ கழகம்*
*தென் புலோலி*

[C/5533]

**ராஜா**
**யாழ்ப்பாணம்**

01.01.2003 முதல் குதூகல ஆரம்பம

முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

**சுந்தரா ரவல்ஸ்**

10.30, 2.30, 6.30

(C/5524)

ஜப்பானில் கராத்தே பயிற்சி

மேற்படி பயிற்சிப் போட்டியில கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

*மாவட்ட இணைப்பாளர்*
**P.ராஜன் (ஆசிரியர்)**
**கொக்குவில் மேற்கு**

[C/5532]

வலம்புரியின் ஆதரவுடன் மூத்த பத்திரிகையாளர்
அமரர் சி.செல்லத்துரை அவர்கள்
ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியின்

**பரிசளிப்பு விழா**

இடம் : வலம்புரி கேட்போர் கூடம்
காலம் : 04.01.2003 சனிக்கிழமை மு.ப. 11.00 மணி

பிரதம விருந்தினர்
**கலாநிதி க.குணராசா (செங்கையாழியான்)**
(மாகாண இணைப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்
**திருமதி கோகிலா மகேந்திரன்**
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)
**திருமதி அ.சண்முகநாதன். M.A**
(அதிபர்)

பரிசில் வழங்கல்
பிரதம விருந்தினர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

வலம்புரிக் குடும்பம்

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.